# சுபீட்சம்

சுபீட்சம் SUPEEDSAM EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

திங்கட்கிழமை 25.10.2021 supeedsam.com supeedsam@gmail.com







# கிழக்கு பறிபோகின்ற விடயங்கள் இடம்பெறும்போது கிழக்கின் மீட்பர்கள் கோழும்பிலும், இந்தியாவிலும்

(துதிமோகன்)

எமது மாவட்டத்தின் அபிவிருத்திக் குழுத் தலைவர் மற்றும் இராஜாங்க அமைச்சர் கிழக்கை மீட்பவர்கள் என்று சொல்லுகின்றார். ஆனால், கிழக்கு பறிபோகின்ற விடயங்கள் இடம்பெறும் போது கிழக்கின் மீட்பர்கள் கொழும்பிலும், இந்தியாவிலும் என்கின்றார்கள். அதேபோன்று கிழக்கின் ஆளுநர் தனிப்பட்ட ஒரு இனத்தின் ஆளுநராகவே செயற்படுகின்றார் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு வாகரை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட காரமுனை காணிப் பிரச்சனை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன் போது அவர் மேலும் தெரிவிக்கையில், வாகரை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட காரமுனை என்கின்ற தமிழ் பேசும்

02 ஆம் பக்கத்தில்...

## கலவரத்தை ஏற்படுத்த முனைகிறார் ஆளுநர் ஸ்ரீநேசன் குற்றசாட்டு



(துதிமோகன்)

கிழக்கின் ஆளுநர் அனுராதா ஜகம்பத் பல்லினத்திற்கான ஆளுநராக இல்லாமல் தனிப்பட்ட ஒரு இனத்தின் ஆளுநராகவே செயற்படுகின்றார்.

அவர் பெரும்பான்மை மக்களை எமது மக்களின் நிலங்கள், மேய்ச்சல் தரைகள் போன்றனவற்றில் குடியமர்த்தி இனக் கலவரத்தை ஏற்படுத்த முனைகின்றார் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு வாகரை பிரதேச செயலாளர் பிரிவிற்கு உட்பட்ட

02 ஆம் பக்கத்தில்...

## வத்திக்கான் உங்களுடன் நிற்கும் பாப்பரசர் கர்தினாலுக்கு கடிதம்



உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க எடுக்கப்படும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் வத்திக்கான் தனது முழு ஆதரவை வழங்கும் என்று கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித்திடம்

02 ஆம் பக்கத்தில்...

## கிழக்குக்கு தமிழ் ஆளுநர்?


கிழக்கு மாகாண ஆளுனராக சுந்தரம் அருமைநாயகம் அவர்கள் நியமிக்கப்பட வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது.

தற்போதைய கிழக்கு மாகாண ஆளுநர் அவர்கள் வெளிநாட்டு தூதரகம் ஒன்றின் அதிகாரியாக நியமிக்கப்பட்ட உள்ளார்.

அவ்வாறு நயமனம் இடம் பெறும் போது கிழக்கு மாகாண புதிய ஆளுநராக மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் அவர்களை நியமிக்குமாறு கிழக்கு மாகாண ஆளும் கட்சி அரசியல் தலைவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## உணவு போதியில் கிடந்த பல்லி

### சிற்றுண்டிச்சாலைக்கு சீல் வைப்பு



(ஏறாவூர் நிருபர் நாஸர்)

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் அண்மித்த பகுதியில் இயங்கிவரும் பொதுமக்கள் சிற்றுண்டிச்சாலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நோயாளர் ஒருவருக்கென கொள்வனவு செய்யப்பட்ட பகலுணவுப் பொதியில் பல்லியொன்று இறந்தநிலையில் காணப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

02 ஆம் பக்கத்தில்...

## இன்று அனைத்து ஆரம்ப பாடசாலைகளும் ஆரம்பம்

(காந்தன்)

நாடளாவிய ரீதியில் இன்று திங்கட்கிழமை அனைத்து ஆரம்பப் பாடசாலைகளும் மீளத் திறக்கப்படவுள்ள நிலையில், மாணவர்கள் சீருடையில் பாடசாலைக்கு சமுகமளிக்க வேண்டிய கட்டாயமில்லை என கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.

தற்போதைய நிலையில் மக்களது நிலைமையை கருத்திற் கொண்டே இந்த

02 ஆம் பக்கத்தில்...

## இந்தியாவின் யுத்த கப்பல்கள் திருமலை துறைமுகத்தை வந்தடைந்தது



திருமலை ரவ்பீக் பாயிஸ்

இந்தியாவின் நான்கு யுத்த கப்பல்கள் திருகோணமலை துறைமுகத்தினை வந்தடைந்துள்ளதாக துறைமுக வட்டரங்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு இலங்கை வந்தடைந்த இந்தியாவின் முதல் பயிற்சி படையணியின் 6 இந்திய கப்பல்கள் நான்கு நாள் விஜயமொன்றை

02 ஆம் பக்கத்தில்...

# சிங்கள குடியேற்றங்களை உடன் நிறுத்தவும் தமிழ் தேசிய கட்சிகள் அவசர கோரிக்கை

(ராஜ்)

தமிழர் தாயகத்தில் மறைமுக நிகழ்ச்சித் திட்டங்களூடாக முன்னெடுக்கப்படும் சிங்கள குடியேற்றங்களை உடன் நிறுத்துமாறு தமிழ் தேசிய கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது குறித்து நீர்ப்பாசன அமைச்சரும் மற்றும் உள்ளக பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சருமான சமல் ராஜபக்ஷவிற்கு கடிதம் ஒன்றினையும் அவர்கள் அனுப்பியுள்ளனர்.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, ‘‘அரச தலைவரின் கிராமத்தினுடனான

02 ஆம் பக்கத்தில்...

## நான் சோன்னதைக் கேட்டிருந்தால் இவ்வாறு நடந்திருக்காது

### முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால தெரிவிப்பு



(திருமலை ரவ்பீக் பாயிஸ்)

நாட்டில் தற்போது உரம் பசளை பிரச்சினை காணப்படுகின்றது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்தின் பிரதான கட்சியாக இருக்கின்றது. அதனடிப்படையில் நீங்கள் உரம் பசளை பிரச்சினை தொடர்பில் எடுத்த நடவடிக்கைகள் என்ன என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களிடம் கேட்டபோதே அவர் இவ்வாறு பதிலளித்தார்.

திருகோணமலை மாவட்டத்தில் மஹதிவுல்வெவதிவுறும்கல விகாரையில் தியான மண்டபத்தை திறந்து வைத்து ஊடகங்களுக்கு கருத்து

02 ஆம் பக்கத்தில்...






## உரத்திற்காக தேங்காய் உடைத்து விவசாயிகள் போராட்டம்



(க.கிஷாந்தன்)

விவசாய நடவடிக்கைகளுக்கு தேவையான உரத்தை வழங்குமாறு வலியுறுத்தி கொத்மலை பகுதி விவசாயிகள் நேற்று போராட்டத்தில் ஈடுப்பட்டனர்.

கொத்மலை வயல் பகுதியில் பதாதைகளை ஏந்தி, கோஷங்களை எழுப்பியவாறு இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

02 ஆம் பக்கத்தில்...







## சிங்கள குடியேற்றங்களை உடன் நிறுத்தவும் தமிழ் தேசிய கட்சிகள்

மக்கள் சந்திப்பு எனும் தொனிப் பொருளில் கடந்த 03.04.2021 இல் வவுனியா மாவட்டத்தில் வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவின் வெடிவைத்த கல்லு கிராம அலுவலர் பிரிவில் உள்ள 'போகஸ்வெல'என தற்போது பெயர் மாற்றம் பெற்றுள்ள கொச்சியான் குளம் என்ற தமிழ் மக்களின் மரபுரிமையுடைய பூர்வீக கிராமத்தில் நிகழ்வு ஒன்று இடம்பெற்றது.

இதன்போது அப்போதைய வவுனியா மாவட்டச் செயலாளர் சமன் பந்துலசேனவின் வேண்டுகோளின் பிரகாரம் வடமத்திய மாகாணத்தின் எல்லைக்குட்பட்ட கெப்பிட்டிகொலாவ பிரதேச செயலாளர் பிரிவின் கனுகாவெல கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த 600 குடும்பங்களும், பதவியா கிராம அலுவலர் பிரிவு மற்றும் கம்பிலிவெலலெதகன்ன கிராமங்களைச் சேர்ந்த 430 குடும்பங்களும் வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவின் வெடிவைத்த கல்லு கிராம அலுவலர் பிரிவுடன் இணைப்பதற்கு கோரிக்கை விடுக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அண்மையில் எல்லை நிர்ணய ஆணைக்குழுவிற்கு, வவுனியா மாவட்ட அரச அதிபராக இருந்த சமன் பந்துலசேனவின் இக்கோரிக்கை முன்மொழிவாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வடக்கு வடமத்திய மாகாணங்களின் எல்லைகளை மாற்றி அமைப்பதன் ஊடாக வடக்கு மாகாணத்தின் இனப்பரம்பல் கோலத்தை மாற்றி அமைத்து, அதனால் அப்பிரதேசத்தில் தமிழ் மக்களின் அரசியல் ஸ்திரத்தன்மையை கேள்விக்குறியாக்குகின்ற செயற்பாடாக இது திட்டமிடப்பட்டுள்ளது.

அத்துடன், கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைக்கு முரணாகவும் இன நல்லிணக்கத்தை பாதிக்கின்ற செயலாகவும் இது அமையும் என்பதால், இந்நடவடிக்கையை உடன் நிறுத்தும்படி வடமாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் தேசிய கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய நாம் கோரிக்கை விடுப்பதோடு, இவ்வாறான செயல்முறைகளை வன்மையாக கண்டிக்கிறோம்.

இவ்வாறான மறைமுக நிகழ்ச்சித் திட்டங்களூடாக முன்னெடுக்கப்பட்ட சிங்கள குடியேற்றங்களே இந்நாட்டில் 30 வருடங்களுக்கு மேல் நடந்த யுத்தத்திற்கு வித்திட்டதுடன், இன நல்லுறவை பாதிக்கும் விடயமாக அமைந்தது என்பதையும் நினைவுபடுத்துகிறோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## இந்தியாவின் யுத்த கப்பல்கள்

மேற்கொண்டு வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஐ.என்.எஸ்.மகர் மற்றும் ஷர்துல் ஆகிய இரண்டு கப்பல்கள் கொழும்பு துறைமுகத்திற்கு சென்றுள்ளதாகவும் ஐ.என்.எஸ்.சுஜாதா,தரங்கனி,சுதர்ஷினி மற்றும் சி.ஜி.எஸ். விக்ரம் ஆகிய நான்கு கப்பல்கள் திருகோணமலை துறைமுகத்தினை வந்தடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## கிழக்கு பறிபோகின்ற விடயங்கள் இடம்பெறும்போது கிழக்கின் மீட்பர்கள்

மக்களின் கிராமத்தில் திட்டமிட்ட அடிப்படையில் போலி ஆவணங்களைத் தயாரித்து பெரும்பான்மை இனத்தவர்களைக் குடியேற்றுவதற்காக கிழக்கு மாகாண காணி ஆணையாளர் மிகவும் இரகசியமான முறையில் நடவடிக்கை மேற்கொண்டிருக்கின்றார்.

கிழக்கு மாகாணத்திலே ஏற்கனவே இவ்வாறான முறையில் இனப்பரம்பல் மாற்றப்பட்டு திருகோணமலை, அம்பாறை மாவட்டங்கள் பறிபோயிருக்கின்றன. இருப்பது மட்டக்களப்பு மட்டும் தான். இங்கும் பெரும்;பான்மை இனத்தவர்களை திட்டமிட்டு குடியேற்றி இங்கும் எதிர்காலத்தில் நாங்கள் சிறுபான்மை சமூகமாக வாழ்வதை நோக்காகக் கொண்டு நீண்டகால அடிப்படையில் இத்திட்டம் மேற்கொள்ளப்படுகின்றது.

எமது அதிகாரிகள் பலர் இது தொடர்பில் எங்களிடம் வேதனைப்படுகின்றார்கள். ஆனால், இதில் வேதனைக்குரிய விடயம் என்னவென்றால் உயரதிகாரிகள் சிலர் தங்களது பதவிகளைப் பாதுகாத்துக் கொள்வதற்காக இந்த விடயங்களைப் பரமஇரகசியமாக வைத்துப் பாதுக்காக்கின்றார்கள்.

எமது மாவட்டத்தின் அபிவிருத்திக் குழுத் தலைவர் எப்போதும் கிழக்கு மீட்பர், கிழக்கைப் பாதுகாப்பவர், கிழக்கின் இரட்சகர் போன்று பேசிக்கொண்டிருக்கின்றார். அதேபோல் எமது இராஜாங்க அமைச்சரும் கிழக்கைப் பாதுகாப்பதென்று சொல்லுகின்றார். ஆனால் கிழக்கு பறிபோகின்ற போராட்டங்கள் வருகின்ற போது இவர்கள் கொழும்பிலும், இந்தியாவிலும் தங்கியிருந்து தாங்கள் இங்கில்லை என்று சொல்லுகின்றார்கள்.

இந்த விடயங்களை நாங்கள் தட்டிக் கேட்காமல் விடுகின்ற போது எமது நிலங்கள் எல்லாம் தட்டிப் பறிக்கப்படுகின்றன. ஒரு காலத்தில் அம்பாறையில் கல்லோயக் குடியேற்றம் திருகோணமலையில் கந்தளாய் குடியேற்றம் என்பன வந்து அங்கெல்லாம் நாங்கள் அடிபட்டு வந்ததைப் போன்று மட்டக்களப்பிலும் அடிப வேண்டிய நிலையே ஏற்படும். நாங்கள் இனவிரோதிகளும் அல்ல, இனவாதிகளும் அல்ல. ஆனால், எமது மண்ணில் எமது மக்கள் குடியிருப்பதற்கு நீங்கள் வழிவிடுங்கள். அயல்மாவட்ட, மாகாணங்களுக்கு அப்பாற்பட்டு நீங்கள் குடியேறுகின்ற விடயத்தைச் சட்டவிரோதமான செயற்பாடாகவே நாங்கள் பார்க்கின்றோம்.

இங்கு இவர்கள் காண்பிக்கின்ற ஆவணங்கள் போலியாக செய்யப்பட்டிருக்கின்றன. ஏனெனில் சிங்களத்தில் தட்டச்சு செய்த ஆவணங்கள் எமது மாவட்டத்தில் கொடுக்கப்படவே இல்லை. மின்சாரக் கட்டணங்கள் வழங்காப்பட்டதாகக் கூட போலி ஆவணங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. வாக்காளர் பட்டியலில் அவர்கள் பெயர்கள் இல்லை. எனவே இவை திட்டமிட்ட அடிப்படையில் ஆளுநர் செய்கின்ற செயற்பாடுகளாகும்.

ஆளுநர் ஜகம்பத் பல்லினத்திற்கான ஆளுநராக இல்லாமல் தனிப்பட்ட ஒரு இனத்தின் ஆளுநராகவே செயற்படுகின்றார். அவர் மூன்று விடயங்களையே செய்து கொண்டிருக்கின்றார். பெரும்பான்மை மக்களை எமது மக்களின் நிலங்கள், மேய்ச்சற்தரைகள் போன்றனவற்றில் குடியமர்த்தி இனக்கலவரத்தை ஏற்படுத்த முனைகின்றார். இரண்டாவது, தமிழ் பேசும் உயர் அதிகாரிகள் ஒய்வு பெற்றுச் செல்லும் போது அந்த உயர் நிருவாகங்களில் சிங்களவரை நியமிக்கின்றார். மூன்றாவது, ஒழுங்கான முறையில் இயங்கிக் கொண்டிருக்கும் உள்ளூராட்சி சபைகளைக் கலைப்பதற்காக தங்கள் அடிவருடிகளை இங்கு அனுப்பி அந்தச் சபைகளைக் குழப்பிக் கொண்டிருக்கின்றார். இவற்றையே அவர் செவ்வனே செய்துகொண்டிருக்கிறார்.

நாங்கள் விழிப்பாக இல்லாது விட்டால் எங்கள் வீட்டுக் கதவுகளும் குடியேறுவதற்குத் தட்டப்படும் நிலையே உருவாகும். வழிப்புடன், அனைவரும் ஒன்று சேர்ந்து போராடுவதன் மூலம் நாங்கள் எங்கள் உரிமையைப் பாதுகாப்போம். நாங்கள் யாருக்கும் எதிரிகள் அல்ல. எமது மண்ணைப் பாதுகாப்பதற்காகவே நாங்கள் கஸ்டப்படுகின்றோம்.

ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம் என்பது போல நாங்கள் எங்களுக்குள் பிளவு பட்டால் கூத்தாடிகள் கூரையைப் பிரித்துக் கொண்டு இங்கு குடியேறுவதற்கு வருவார்கள். எனவே இந்த விடயத்தில் மிகக் கவனமாக இருக்க வேண்டும் என்று தெரிவித்தார்.




## உரத்திற்காக தேங்காய் உடைத்து

அகில இலங்கை விவசாய சம்மேளனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த போராட்டத்தில் பங்கேற்ற விவசாயிகள் உர தட்டுப்பாட்டால் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை உள்ளக்குமுறல்களாக வெளிப்படுத்தினர்.

விவசாய நடவடிக்கைகளுக்கு தேவையான உரம் வழங்கப்படாததால் விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும், விவசாயிகள் அணைவரும் விவசாயத்தை கைவிட்டு செல்ல வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளதாக போராட்டத்தில் ஈடுப்பட்ட விவசாயிகள் சுட்டிக் காட்டினர்.

அத்துடன், அரசாங்கம் இந்த விடயத்தில் தனது பிடிவாத போக்கை கைவிட வேண்டும் என வலியுறுத்திய விவசாயிகள் உரத்துக்காக தேங்காய் உடைத்து இறைவனிடம் முறைபாடு செய்தனர்.

## நான் சொன்னதைக் கேட்டிருந்தால்

தெரிவிக்கும் போது ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

கடந்த போகத்தின் போது முதல் வாரத்தில் பசளையை தடை செய்யப் போவதாக ஊடகங்களில் வெளியானதையடுத்து நான் தனிப்பட்ட முறையிலும், பாராளுமன்ற குழுவின் ஊடாகவும் சம்மநதப்பட்ட

தரப்பினருக்கு தெரியப்படுத்தினேன். ஆனாலும் நான் சொன்னதை அவர்கள் கேட்கவில்லை. அதனாலேயே இவ்வாறான சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் அமைச்சராக ஜனாதிபதியாக இருந்த நேரத்தில் சேதனப் பசளை ஊக்குவிக்கும் நோக்கில் பல திட்டங்களை மேற்கொண்டு வந்தேன். இருந்தும் உடனடியாக சேதனப்பசளையை மாத்திரம் பயன்படுத்தி விவசாய நடவடிக்கைகளை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

மேலும் இவ் பசளை பிரச்சினைக்கு தீர்வு கிடைப்பதற்கு 5 அல்லது 10 வருடங்கள் காலம் தாமதிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது எனவும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## உணவு பொதியில் கிடந்த பல்லி

இச்சிற்றுண்டிச்சாலை சுகாதாரத் துறையினரால் சீல்; வைத்து மூடப்பட்டுள்ளதுடன் கடை உரிமையாளர் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கல்முனையைச்சேர்ந்த பெண்ணொருவர் 2 ஆம் வாட்டில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுவருகிறார். இந்த நோயாளிக்கு துணையாக உள்ள அவரது சகோதரி இச்சிற்றுண்டிச்சாலைக்குச்சென்று மீன் சாப்பாடுப் பொதியொன்றை வாங்கியுள்ளார். அப்பொதியினைப் பிரித்து சாப்பிடத் தாரானபோது மீன் கறியில் பல்லியொன்றும் வெந்தநிலையில் காணப்பட்டுள்ளமை அவருக்கு வியப்பையும் அருவருப்பையும் ஏற்படுத்தியதாகக் குறிபிட்டார்.

சமையல் காரரது கவனயீனம் காரணமாக கறிச்சட்டிக்குள் பல்லி விழுந்திருக்கலாமென சந்தேகிக்கப்படுகிறது. எவ்வாறிருப்பினும் வைத்தியசாலை அதிகாரிகள் அதிகாரிகள் இவ்விடயத்தில் கவனம்செலுத்தி உரிய சிற்றுண்டிச்சாலை உரிமையாளருக்கு எச்சரிக்கை விடுக்கவேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## இன்று அனைத்து ஆரம்ப பாடசாலைகளும்

நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய ஆரம்பபிரிவு வகுப்பு மாணவர்கள் தம்மிடம் இருக்கின்ற ஏதேனும் ஒரு ஆடையுடன் பாடசாலை செல்ல முடியும் என்றும் அவர் அறிவித்துள்ளார்.

## வத்திக்கான் உங்களுடன் நிற்கும் பாப்பரசர்

பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் வத்திக்கான் கார்டினல் மெல்கம் ரஞ்சித்துக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில்,

வத்திக்கான் இலங்கையின் செயல்முறையை உன்னிப்பாக கவனித்து வருவதாகவும், அது இலங்கை மக்களுக்கு தொடர்ந்து ஆதரவளிக்கும் என்று குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் மெல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை விசாரிக்க சர்வதேச தலையீடு கோரி கர்தினால் விடுத்த அழைப்புகளுக்கு பதிலளிக்கும் வகையில் இந்த கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

## கலவரத்தை ஏற்படுத்த முனைகிறார் ஆளுநர்

காராமுனை காணிப் பிரச்சினை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன் போது அவர் மேலும் தெரிவிக்கையில்; அவர் மூன்று விடயங்களை செய்து கொண்டிருக்கின்றார். ஒன்று, பெரும்பான்மை மக்களை எமது மக்களின் நிலங்களில் குடியமர்த்தி இனக்கலவரத்தை ஏற்படுத்த முனைகின்றார். இரண்டாவது, தமிழ் பேசும் உயர் அதிகாரிகள் ஓய்வு பெற்றுச் செல்லும் போது அந்த உயர் நிர்வாகங்களில் சிங்களவரை நியமிக்கின்றார்.

மூன்றாவது, ஒழுங்கான முறையில் இயங்கிக் கொண்டிருக்கும் உள்ளூராட்சி சபைகளைக் கலைப்பதற்காக தங்கள் அடிவருடிகளை இங்கு அனுப்பி அந்தச்சபைகளைக் குழப்பிக் கொண்டிருக்கின்றார். இவற்றையே அவர் செவ்வனே செய்துகொண்டிருக்கிறார்.

நாங்கள் விழிப்பாக இல்லாது விட்டால் எங்கள் வீட்டுக் கதவுகளும் குடியேறுவதற்கு தட்டப்படும் நிலையே உருவாகும். விழிப்புடன், அனைவரும் ஒன்று சேர்ந்து போராடுவதன் மூலம் நாங்கள் எங்கள் உரிமையைப் பாதுகாக்க முடியும்.

நாங்கள் யாருக்கும் எதிரிகள் அல்ல. எமது மண்ணைப் பாதுகாப்பதற்காகவே நாங்கள் கஸ்டப்படுகின்றோம்.

ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம் என்பது போல நாங்கள் எங்களுக்குள் பிளவு பட்டால் கூத்தாடிகள் கூரையைப் பிரித்துக் கொண்டு இங்கு குடியேறுவதற்கு வருவார்கள். எனவே இந்த விடயத்தில் மிகக் கவனமாக இருக்க வேண்டும் என ஸ்ரீநேசன் தெரிவித்தார்.

நாள் தோறும் செய்திகளை வீடியோ வடிவில் பார்க்க
Supeedsamtv.com




supeedsam epaper, supeedsam videos, supeedsam news
www.supeedsam.com

# நுவரேலியா இராகலையில் அரசாங்கத்திற்கு எதிராக த.மு.கூ ஏற்பாட்டில் போராட்டம்





**(க.கிஷாந்தன்)**

இந்த அரசாங்கம் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை கொண்டிருந்தாலும் மக்கள் மத்தியில் பெரும்பான்மை பலத்தை இழந்திருக்கின்றது.

விரைவில் இந்த அரசாங்கத்தை வீட்டிற்கு அனுப்புவோம். அதுவரை ஓயமாட்டோம் என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதி தலைவரும், நாடாளுமன்ற எம்.பியுமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

அரசாங்கத்திற்கு எதிரான போராட்டம் தமிழ் முற்போக்கு கூட்டணியின் ஏற்பாட்டில் இராகலை நகரில் இடம்பெற்றது.

இராகலை உடபுஸ்ஸலாவ பிரதான வீதியில் போராட்டம் ஆரம்பமாகி பிரதான வீதியில் ஊர்வலமாக இராகலை முருகன் ஆலயம் வரை சென்றடைந்தது. அங்கு ஆலயத்திற்கு முன்பாக கூட்டம் நடைபெற்றது. இந்த போராட்டத்திற்கு இராகலை வர்த்தகர்கள் கடைகளை மூடி ஆதரவு தெரிவித்தனர்.

இந்த போராட்டத்தில் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மயில்வாகனம் உதயகுமார், கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், தமிழ் முற்போக்கு கூட்டணியின் முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து அங்கு உரையாற்றிய எம்.பி இராதாகிருஷ்ணன்,

குறுகிய காலத்தில் மக்களின் அதிருப்தியை சம்பாதித்து கொண்ட ஒரு அரசாங்கம் என்றால் அது இந்த அரசாங்கமே. இன்று எதை கேட்டாலும் விலையேற்றம், தட்டுப்பாடு என்ற வார்த்தைகளே வெளிவருகின்றது.

இந்த தீபாவளி தமிழர்களுக்கு ஒரு கறுப்பு தீபாவளியாக அமைய போகின்றது. பொருட்களின் விலையேற்றம், வேலைக்கான உரிய சம்பளமின்மை, தொடர்ச்சியான மக்களின் போராட்டம் போன்ற காரணங்களால் இந்த தீபாவளியை மக்கள் கொண்டாட முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள். குறிப்பாக பெருந்தோட்ட தொழிரலாளர்கள் விசேடமாக கொண்டாடும் தீபாவளி தினத்தை துக்க தினமாக கொண்டாட வேண்டிய சூழ்நிலையை இந்த அரசாங்கம் உருவாக்கியிருக்கின்றது.

நல்லாட்சி அரசாங்கத்தில் 50 ரூபாய் சம்பள உயர்வை தோட்ட தொழிலாளர்களுக்கு பெற்றுக் கொடுக்க முடியாது என்று எங்களை பார்த்து கை நீட்டியவர்கள் இன்று என்ன செய்துக் கொண்டிருக்கின்றார்கள்.

வாய் மூடி மௌனிகளாக அரசாங்கத்தை வக்காளத்து வாங்கி கொண்டிருக்கின்றார்கள். தொழிலாளர்களுக்கு எதிராக நடக்கின்ற அநீதிகளுக்கு குரல் கொடுக்க முடியாமல் இருக்கின்றார்கள்.

இப்படியான ஒரு நிலையில் நல்லாட்சியை குறை சொல்ல யாருக்கும் அருகதை கிடையாது. நல்லாட்சி அரசாங்கத்தில் கணிசமான சம்பள உயர்வை வழங்கியதோடு, எந்த காரணத்திற்காகவும், அத்தியவசிய பொருட்களின் விலைகள் அதிகரிக்கபடவில்லை.

எனவே, மக்களுக்கு துரோகம் செய்து கொண்டிருக்கின்ற இந்த அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்பும் வரை தமிழ் முற்போக்கு கூட்டணியின் போராட்டம் தொடரும்.

வேலுகுமார் எம்.பி கருத்து தெரிவிக்கையில்,

ஜனாதிபதி அத்தியவசிய பொருட்களின் விலைகளை குறைப்பது எனது பொருப்பல்ல என்று சொல்லுகிறார். அப்படியானால் நான் அவரை பார்த்து கேட்க விரும்புகின்றேன். எதற்காக அரசி விலை, சீனி விலை உட்பட அத்தியவசிய பொருட்களுக்கு விலை குறைக்க வர்த்தமானி அறிவித்தலை ஏன் வெளியிட்டீர்கள்.

அப்படியானல் அது வெறும் கண் துடைப்பா ? மக்களை ஏமாற்றும் செயலா? அல்லது மக்கள் கூறினார்களா வர்த்தமானி அறிவித்தலை வெளியிடும் படி. எல்லாம் நீங்களே செய்து விட்டு கடைசியாக சிறுபிள்ளை தனமாக இவ்வாறு கூறுவது எந்த வகையில் பொருத்தமானது என்று வேலுகுமார் எம்.பி கருத்து வெளியிட்டார்.

உதயகுமார் எம்.பி கருத்து தெரிவிக்கையில்,

இந்த அரசாங்கம் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு பாரிய துரோகம் இழைத்திருக்கின்றது. சம்பள உயர்வு இல்லை. குறைவான வேலை நாட்கள் அத்தியவசிய பொருட்களின் விலை அதிகரிப்பு இப்படி பெருந்தோட்ட தொழிலாளர்களை குழியில் தள்ளிவிட்டிருக்கின்றது இந்த அரசாங்கம்.

இந்த கப்பல் %5 வீதம் மூழ்கிவிட்டது. மீதம் இருப்பது 25 வீதமே. எந்த காரணம் கொண்டும் காப்பாற்ற முடியாது. இந்த அரசாங்கம் திசையின்றி, நோக்கம்யின்றி, நிர்வாக கட்டுப்பாட்டின்றி தத்தளித்து கொண்டிருக்கும் ஒரு அரசாங்கம்.

இந்த அரசாங்கத்தை நம்பி வாக்களித்த மக்களுக்கு இந்த அரசாங்கம் நல்ல பாடத்தை புகட்டிருக்கின்றது என்று உதயகுமார் எம்.பி கருத்து தெரிவித்தார்.

## காரைதீவில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம்




**(காரைதீவு நிருபர்)**

காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் சமகாலத்தில் சுகாதாரத்துறையினரால் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

பருவநிலை மாற்றம் காரணமாக மழைக்காலம் ஆரம்பமாக உள்ளதனால் ,காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தஸ்லீமா வசீர் தலைமையில் இவ்வேலைத்திட்டம் துரிதமாக முன்னெடுக்கப்பட்டுவருகிறது.

உயர்தரமாணவர்க்கு பைசர் வக்சீன் ஏற்றப்படும் வேலைப்பழுக்களின் மத்தியில் டெங்குநோய் ஒழிப்புவேலைத்திட்டமும் மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் சா.வேல்முருகு பொது சுகாதார பரிசோதகர்கள் நுளம்பு களதடுப்பு பிரிவினர்கள் இணைந்து மேற்கொண்டுவருகின்றனர்.

காரைதீவு பிரதேச சபை ஊழியர்கள் இணைந்து மேற்கொள்ளும் டெங்கு நுளம்புகள் பெருகுவதை தடுக்கும் பொருட்டு தொடர்ச்சியாக கொள்கலன் சேகரிப்பு நிகழ்வுகள் மாளிகைகாடு, காரைதீவு ,மாவடிப்பள்ளி போன்ற பிரதேசங்களில் இடம்பெற்றுவருகின்றன.

காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தஸ்லீமா வசீர் இதுதொடர்பாக கருத்துரைக்கையில்:

நுளம்பு பெருகுவதனை குறைக்கவும் எங்கள் பகுதியில் டெங்கு பரவுவதைத் தடுக்கவும் ,தினமும் காலை குறைந்தது 10 நிமிடங்கள் உங்கள் சுற்றுச்சூழலைப் நுளம்பு பெருகும் இடங்களை அகற்றி டெங்கு நோயிலிருந்து பாதுகாத்துக் கொள்ள முடியும். பொதுமக்களாகிய அனைவரும் எமது பிரதேசத்திலிருந்து டெங்கை ஒழிக்க உதவுமாறும் கேட்டுக்கொண்டார்.

## சம்மாந்துறையில் ஆர்ப்பபட்டம்



**(சம்மாந்துறை நிருபர்)**

விவசாயிகளுக்கான உரம், கிருமிநாசினி போன்ற பிரச்சினைக்கான தீர்வு வழங்கக்கோரியும், விவசாயக் காணிகள் அபகரிப்பிற்கு எதிராகவும் விவசாயிகள் நேற்று(24) சம்மாந்துறையில் ஆர்ப்பபட்டத்தில் ஈடுபட்டனர்.

அம்பாறை மாவட்ட அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனமும், சம்மாந்துறைப் பிரதேச விவசாயிகள் அமைப்புக்களும் இணைந்து ஏற்பாடு செய்த ஆர்ப்பாட்டம் சம்மாந்துறை ஹிஜ்ரா சந்தியில் இடம்பெற்றது.

அம்பாறை மாவட்ட அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனத்தின் தலைவரும், மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான வசந்த பியதிஸ்ஸ, மக்கள் விடுதலை முன்னணியின் சம்மாந்துறைத் தொகுதி அமைப்பாளருமான ஏ.எஸ்.எம். புஹாரி, சம்மாந்துறை அகில இலங்கை விவசாயிகளின் அமைப்பின் தலைவரும், தேசிய மக்கள் சக்தியின் சம்மாந்துறைத் தொகுதி அமைப்பாளருமான வை.பீ.எம். நபாஸ், சம்மாந்துறைத் தொகுதி இளைஞர் பாராளுமன்ற உறுப்பினருமான அமீர் அப்னான் பெருந்திரளான விவசாயிகளும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

விவசாயிகளை ஒடுக்காதே, விவசாயிகளின் வயிற்றில் அடிக்காதே, இரசாயன உரத்தினை விவசாயிகளுக்கு வழங்கு, சீனாவின் குப்பையை அனுமதிக்காதே, இந்தியாவின் உர திரவத்தை விவசாயிகளுக்கு திணிக்காதே, ஆட்சியாளர்களே இரசாயன உர அனுமதியை பெற்றுத்தா, அரசே விவசாயிகளின் வயிற்றில் அடிக்காதே, விவசாயிகளை வாழ விடு, விவசாயிகளுக்கு இரசாயனப் பசளையே வேண்டும். அரசே இரசாயன உரத்தினையும், உரமானியத்தினையும் உடன் வழங்கு, போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட சுலோக அட்டைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

## திருமலையில் விபத்து: ஒருவர் பலத்த காயம்

**(திருகோணமலை ரவ்பீக் பாயிஸ்)**



திருகோணமலை நிலாவெளி பிரதான வீதியில் அலஸ் தோட்டம் பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் பலத்த காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

நேற்று இரவு இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

திருகோனமலையில் மாலை தொடக்கம் அடைமழை பெய்துவந்த நிலையில் வேகக்கட்டுப்பாட்டை இழந்த முச்சக்கர வண்டி இன்னுமொரு முச்சக்கரவண்டியுடன் மோதி வீதியில் நிறுத்திவைக்கட்டிருந்த காருடன் மோதி இவ்விபத்து ஏட்ப்பட்டுள்ளதாக உப்புவெளி பொலிசார் தெரிவித்தனர்.

இவ்வாறு விபத்துக்களான இரு முச்சக்கர வண்டிகளில் ஒரு முச்சக்கர வண்டியின் சாரதியே பலத்த காயங்களுடன் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்

விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை உப்புவெளி பொலிசார் மேற்க்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கூட்டுறவுச் சங்கங்களினூடாக பால்மா விநியோகம் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் அஸ்மி

**(ஏ.எல்.றியாஸ்)**



கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் கூட்டுறவுச் சங்கங்களினூடாக பால்மாவினை விநியோகிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளருமான ஏ.எல்.எம்.அஸ்மி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

கூட்டுறவு சேவையில் உணவு வழங்கலும் விநியோகமும் அத்தியாவசிய சேவையாக இருப்பதால், அத்தியாவசிய உணவுப்பொருள் விநியோக நடவடிக்கையினை கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் கூட்டுறவு சங்கங்களின் ஊடாக மேற்கொண்டு வருகிறது.

மத்திய அரசு, கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்துடன் இணைந்து மேற்கொண்டுவரும் இவ்வேலைத்திட்டத்திற்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களமும் பங்களிப்புக்களை வழங்கி வருகின்றது.

கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, கல்முனை ஆகிய நான்கு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பிரிவிலும் உள்ள பலநோக்கு கூட்டுறவு சங்கங்களினூடாக நேற்று முதல் (24) பழைய விலையில் பால்மா விநியோகிக்கப்பட்டு வருகிறது.

நாட்டில் பால்மா தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் கூட்டுறவு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன மேற்கொண்ட முயற்சியின் பயனாக கிழக்கு மாகாண பலநோக்கு கூட்டுறவு சங்கங்களினூடாக பொதுமக்களுக்கு விநியோகிக்கவென இரண்டு கோடி ரூபா பெறுமதியான பால்மா கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக ஆணையாளர் அஸ்மி மேலும் தெரிவித்தார்.

## தடை செய்யப்பட்டுள்ள கருங்காலி மரக்குற்றிகளை ஏற்றிச் சென்ற இருவர் ஏறாவூர் பொலிஸாரினால் கைது



**(ஏறாவூர் நிருபர்)**

வெட்டுவதற்கு அரசாங்கத்தினால் தடை செய்யப்பட்டுள்ள விலை உயர்ந்த கருங்காலி மரக்குற்றிகளை உழவு இயந்திரமொன்றில் ஏற்றிச்சென்ற இருவர் ஏறாவூர்ப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சந்தனமடுஆறு அலியாஓடை பிரதேசத்திலுள்ள அரசாங்க வனப்பகுதியில் சட்டவிரோதமாக வெட்டப்பட்ட இம்மரக்குற்றிகள் சித்தாண்டி பிரதேசத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டவேளை ஏறாவூர்ப் பொலிஸ் ஊழல் ஒழிப்பு பிரிவு பொறுப்பதிகாரி சப் இன்ஸ்பெக்டர் எச்.எம். ஷியாம் தலைமையிலான பொலிஸ் குழுவினர் இம்மரக்கடத்தலை முறியடித்துள்ளனர். சுமார் மூன்று இலட்சம் ரூபா பெறுமதியான எட்டுமரக்குற்றிகள் இந்த உழவு இயந்திரத்தில் காணப்பட்டன.

கைதுசெய்யப்பட்ட உழவு இயந்திரத்தின் சாரதியும் நடாத்துனரும் ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டதையடுத்து பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். எமது நாட்டில் அருகிவரும் கருங்காலி மரங்களை வெட்டுவதற்கு அரசாங்கம் தடைவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உப்புவெளி போலீஸ் நிலயத்திற்கு புதிய பொறுப்பதிகாரி நியமனம்

**திருமலை ரவ்பீக் பாயிஸ்**



திருகோணமலை உப்புவெளி பொலிஸ் நிலையத்திற்கு புதிய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக கே.எஸ் லலித் குமார் நியமிக்கபட்டுள்ளார்.

திருகோணமலை உப்புவெளி பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி கயான் பிரசன்ன மாத்தளை மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகராக பதவி உயர்வு பெற்று இடமாற்றம் சென்றுள்ள நிலையில் வெற்றிடமாக இருந்த உப்புவெளி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பதவிக்கு திருகோணமலை தலைமையக பொலிஸ் பிரிவில் நிர்வாக மற்றும் பதில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக செயல்பட்டு வந்த கே.எஸ் லலித் குமார் அவர்கள் புதிய உப்புவெளி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# SRI JEWELLERY

Swiss, Zürich இல் மிகப் பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்

**பரம்பரை பரம்பரையாக நகைத் தொழிலில் அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்**

வைர தாலி கொடி, மோதிரம், வளையல் பெயர் பெண்டன், மற்றும் அனைத்து நகைகளும் செய்து தரப்படும்.

திருத்த வேலைகளும் உடனுக்குடன் செய்து தரப்படும்.

+41 43 366 80 09 / +41 79 898 51 01

Mattengasse 17, 8005, Zürich, Swiss

info@srijewellery.ch

# Sikaram

தூரிதபணமாற்றுச்சேவை

**Sikaram INTL Gmbh**

Heinrich Strasse 120, 8005 Zürich Tel : 044 2410241
sikaramgmbh@gmail.com / www.sikaram.com Fax : 044 2410245

# Prasath Coiffeur

Öffnungszeiten
Mo -Fr 10.00-19.00
Sa 09.00-18.00

Heinrichstrasse 120, 8005 Zürich. NAT:076 565 64 57

# SwissLife Select

**சுவிசில் சொந்த வீடு வாங்க விரும்பும் உறவுகளே, அவதானமாகச் செயற்படுங்கள். உங்கள் கடனுக்கான வட்டி வீதம் எப்போதும் அதிகரிக்க கூடும். எனவே, சரியான வங்கியையும், வட்டி வீதத்தையும் தெரிந்து கொள்ளுங்கள்.**

உங்கள் வாழ்வின் சகல அம்சங்களிலும் உங்களோடு கரங் கோர்க்கும் ஒரே ஒரு நிறுவனம்...

- மருத்துவ காப்புறுதி
- வாகனக் காப்புறுதி
- குழந்தைகளுக்கான காப்புறுதி
- ஆயுட் காப்புறுதி
- சட்டக் காப்புறுதி



Herr Krishnasamy
**THILEEPAN**
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598

**Swiss Life Select AG**
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.

Email : krishnasamy.thileepan@swisslife-select.ch | Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65



# Allegrotto Pizza Kurier

Allegrotto Pizza Kurier
Bederstrasse 102, 8002 Zürich.
044 280 40 30 | 076 326 91 18
Toll free 0844 80 40 30
pizzakingzurich@gmail.com.
www.allegrotto.ch

# Seela Food Gastro AG

044 222 22 50
076 326 91 18
info@seelagastro.ch
www.seelagastro.ch
Züricherstrasse 15
8400 Winterthur.

# Aaran Ayurveda & Wellness Massage



Stampfenbachstrasse-24, 8001 Zurich, Tel: 043 243 60 66
Mobile: 079 940 1510 | www.aaranayurveda.ch
Krankenkasse Anerkannt

5ம், 6ம் ஆண்டு மாணவர்களுக்கான புதிய கணினி வகுப்புக்கள் ஆரம்பம்

எங்கே? சூரிச் மாநகரில் கணினித்துறையில் நூற்றுக்கணக்கான மாணவர்களை உருவாக்கிய

# Online Tech Network

நிறுவனத்தில்

- ECDL
- Office
- Windows 10



தொடர்புகளுக்கு
**MANOJ MASTER**
Online Tech Network
Militärstrasse 84, 8004 Zürich
043 811 80 90, 076 524 80 59




# வெள்ளி விழாக் காணும் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

**நிந்தவூர் நிருபர்**

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம் ஒரு தேசியப் பல்கலைக்கழகமாக நிறுவப்பட்டு கடந்த (2021.10.23) தனது இருபத்தைந்து வருடங்களைக் கடந்துள்ளன. இவ் இருபத்தைந்து வருட நிறைவினைக் குறிக்கும் வெள்ளி விழா நிகழ்வும் இப்பல்கலைக்கழகத்தின் வருடாந்த ஸ்தாபகர் தின உரையும் கடந்த (23.10.2021) சனிக்கிழமை பல்கலைக்கழகத்தின் மகாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. முற்றிலும் கொவிட்19 சுகாதார வழிமுறைகளைத் தழுவி இடம்பெற்ற இந்நிகழ்வில் உபவேந்தர் பேராசிரியர் அபூபக்கர் றமீஸ் அவர்கள் ஆற்றிய உரையில் குறிப்பிட்டதாவது,

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம் ஒரு தேசியப் பல்கலைக்கழகமாகப் பிரகடனப் படுத்தப்பட்டு, 25 வருடங்களை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது. இந்நிறைவினை ஒரு பெரும் விழாவாகக் கொண்டாடுவதும், இவ்விழாவிற்கு இந்தப் பல்கலைக்கழகத்தின் பழைய மாணவனாகிய நான் தலைமை தாங்குவதும் மிகுந்த மகிழ்ச்சியினைத் தருகின்றது.

இப்பல்கலைக்கழகத்தின் ஆரம்ப வரலாற்றில் பலரது தியாகங்களும் அர்ப்பணிப்புக்களும் நிறைந்துள்ளன. இவ்விடத்தில் முன்னாள் அமைச்சர், மர்ஹூம் கலாநிதி எம்.எச்.எம். அஷ்ரஃப் நினைவுகூறப்பட வேண்டியவர். அவருக்குப் பக்கபலமாக நின்றவர்களும் நலன்விரும்பிகளும் இப்பல்கலைக்கழகத்தின் ஸ்தாபக உபவேந்தர், பதிவாளர், நிதியாளர், ஏனைய கல்விசார், கல்விசாரா உத்தியோகத்தர்களது பங்களிப்பும் குறிப்பிடத்தக்கது.

இந்தப் பல்கலைக்கழகம் பல்கலைக்கழகமொன்றுக்குரிய வளங்கள் எதுவும் இன்றியே ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் இன்று கல்வியிலும் ஆராய்ச்சியிலும் குறிப்பிடும்படியான வளர்ச்சியினைக் கண்டுள்ளது. இந்தப் பல்கலைக்கழகத்தின் பசுமை நிறைந்த உட்கட்டமைப்பு எம்மை பிரமிக்கச் செய்யுமளவிற்கு மாற்றம் கண்டுள்ளது. இந்தப் பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் பல சாதனைகளைப் படைத்துள்ளனர். தொழில் உலகில் அவர்கள் நல்ல திறமைகளை வெளிப்படுத்தி வருகின்றனர்.

இன்று இந்தப் பல்கலைக்கழகம் நமது நாட்டில் தலைமைநிமிர்ந்து நிற்கின்ற ஒரு பல்கலைக்கழகமாக மாறியுள்ளது. மாணவர்கள் நாட்டின் நாலா பக்கங்களிலிருந்தும் வந்து, பாதுகாப்பான ஒரு சூழலில் ஒற்றுமையுடன் கல்வி கற்கும் நிலை இங்கு உருவாகியுள்ளது. முற்றிலும் நவீனமயப்படுத்தப்பட்ட பாடத்திட்டங்களுடன் மாணவர் மைய கல்வியினை வழங்குவதற்கு எமது விரிவுரையாளர்கள் குழாம் எடுத்துவரும் பிரயத்தனங்கள் பாராட்டத்தக்கதவை. அதற்கு எமது நிருவாகத்தினரும் ஏனைய ஊழியர்களும் வழங்கிவரும் ஒத்துழைப்புக்களும் அபரிமிதமானவை.

சமகாலத்தில் பல்கலைக்கழகமொன்றின் தரத்தினையும் வளர்ச்சியினையும் நிர்ணயிப்பதில் பல காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. அவற்றுள் ஆய்வுகளும் அதுசார்ந்த வெளியீடுகளும் முக்கியமானவை. கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு இந்தப் பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் ஆய்வு வெளியீட்டில் பெரும் இடைவெளி காணப்பட்டது. ஆனால் இன்று அந்த நிலை முற்றிலும் மாறியுள்ளது. வருடாந்தம் 100 இற்கு மேற்பட்ட கட்டுரைகள் உலகத் தரம் வாய்ந்த ஆய்வுச் சஞ்சிகைகளில் வெளிவருகின்றன. அவ்வெளியீடுகள் மூலம் எங்களது விரிவுரையாளர்களும் சர்வதேச தரப்படுத்தல் நிரல்களுக்குள் உள்வாங்கப்பட்டு வருகின்றனர்.

இந்தப் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர்கள் பலர் தமது கலாநிதிக் கற்கையினை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பல்கலைக்கழங்களில் வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளனர். 18 பேர் தற்போது பேராசிரியர் தரங்களுக்கு உயர்த்தப்பட்டுள்ளனர். அவர்களுள் 06 பேர் இந்தப் பல்கலைக்கழகத்தின் பழைய மாணவர்கள். இன்னும் பலர் பேராசிரியர் பதவியுயர்வினை எதிர்பார்த்துள்ளனர்.

இளமாணிப் பட்டப்படிப்புக்கள் மட்டுமன்றி, கலாநிதிக் கற்கை உள்ளடங்கலாக பல பட்டப்பின் படிப்புக் கற்கைகளும் இப்பல்கலைக்கழகத்தில் இன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பல பல்கலைக் கழகத்தினைச் சேர்ந்த விரிவுரையாளர்கள் எமது பல்கலைக்கழகத்தின் பட்டப்பின்படிப்பு மாணவர்களாக இணைந்துள்ளனர். இதனை எமது பல்கலைக்கழகத்திற்கு கிடைத்த ஒரு அங்கீகாரமாகவே நான் பார்க்கின்றேன்.

பல்கலைக்கழக கல்வி தொடர்பாக முன்வைக்கப்படுகின்ற மிகப்பெரிய குற்றச்சாட்டு, பட்டம் பெற்று வெளியேறுகின்ற மாணவர்களது தொழில் நிலை சார்ந்ததாக உள்ளது. எனினும் எமது பல்கலைக்கழகம் மாணவர்களது தொழில் நிலைத் தராதரங்களைக் கூட்டுவதற்கு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. 2012 இல் எமது மாணவர்களின் தொழில் நிலை சராசரியாக 36 சதவீதமாக இருந்தது. ஆனால் 2018 இல் அது 68



சதவீதமாக அதிகரித்துள்ளது. இது ஒரு மிகப் பெரிய சாதனை.

இன்று இந்தப் பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடம் மற்றும் சட்ட பீடம் என்பவற்றினை அமைப்பதற்கான முன்னெடுப்புக்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனை சாத்தியப்படுத்துவதற்கு தொலைநோக்குடன் கூடிய அர்ப்பணிப்பும் ஒத்துழைப்பும் அவசியமானவை. அதற்காக எமது பல்கலைக்கழக சமூகத்தினர் வழங்கிவரும் ஒத்துழைப்பும் குறிப்பிடத்தக்கது.

எமது பல்கலைக்கழத்தின் சர்வதேச தரப்படுத்தல் நிலையினை மேலும் முன்னேற்றம் பெறச் செய்யவேண்டிய மிகப் பெரிய பொறுப்பு எம்மிடமுள்ளது. இதனோடு இணைந்ததாக எமது பல்கலைக்கழகத்தின் சமூகப் பங்களிப்பினை அதிகரிக்க வேண்டியுள்ளது. உலகின் முன்னணிப் பல்கலைக்கழகங்கள் பல அந்தப் பிராந்தியத்தில் உள்ள மக்களோடு மக்களாக இருந்து ஆற்றிவரும் பங்களிப்புக்கள் மகத்தானவை. அவ்வாறானதொரு நிலை இந்தப் பல்கலைக்கழகத்திலும் ஏற்படுத்தப்பட வேண்டும். இதற்காக நாம் நமது வெளிக்களத் தொடர்பினை அதிகரிக்க வேண்டியுள்ளது.

எமது நாட்டு ஜனாதிபதியின் தொலைநோக்கிற்கு அமைய எமது பல்கலைக்கழகம் முயற்சியாளர்களையும் தொழில்நுட்பவியலாளர்களையும் உருவாக்கும் ஒரு உயர் கல்வி கேந்திர நிலையமாக மாறவேண்டும். அதன் மூலம் எமது பல்கலைக்கழகத்தின் தேசத்திற்கான பங்களிப்பினை அதிகரிக்க முடியும்.

இறுதியாக எமது பல்கலைக்கழகத்தின் வெள்ளி விழா நிகழ்வினைப் பற்றி சில விடயங்களைக் கூற வேண்டியுள்ளது. எமது பல்கலைக்கழகத்தின் வரலாறு 25 வருடங்களைக் கடந்துள்ள போதிலும், குறுகிய நாட்களுக்குள் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த நிகழ்வில் நினைவு மலர் ஒன்றினை வெளியிட வேண்டும் என்ற கடினமான தீர்மானத்தினை நாம் எடுத்தது மட்டுமல்லாது மிகுந்த அர்ப்பணிப்புக்களுடன் அதனை சாத்தியப்படுத்தியும் உள்ளோம். அதற்கு எமது நினைவு மலர் குழு பல தொடரான சந்திப்புக்களை மேற்கொண்டு, பலரது ஒத்துழைப்புக்களைப் பெற்று, மிகுந்த சிரமத்திற்கு மத்தியில் வெள்ளி விழா மலரினைத் தொகுத்துள்ளது. அவர்களது இடையுறாத முயற்சி பாராட்டப்பட வேண்டியது. இவ்விடத்தில் நினைவு மலரின் பதிப்பாசிரியர் பல்கலைக் கழக நூலகர் எம்.எம். றிபாயுடீன் மேற்கொண்ட அர்ப்பணிப்புக்கள் விசேட கவனத்திற்குரியவை. அவரது முயற்சிக்கு எனது மனம் நிறைந்த பாராட்டுக்கள்.

அதேபோன்று, இப்பல்கலைக்கழகத்தின் வெள்ளி விழா நிகழ்வினையும் ஸ்தாபகர் தின உரை நிகழ்வினையும் ஒருங்குசேர ஏற்பாடு செய்த ஏற்பாட்டுக் குழுவினருக்கும் நன்றிகள். இந்நிகழ்வின் ஒரு அங்கமாக வருடாந்த ஸ்தாபகர் தின உரையினை நிகழ்த்திய, இப்பல்கலைக்கழக ஸ்தாபகரின் மருமகன் வைத்தியர் எம்.ஏ.எம். ஜெஸீம் அவர்களுக்கும் நன்றிகள். இந்நிகழ்வில் பங்கேற்று இந்நிகழ்வினை சிறப்பிக்கச் செய்த ஸ்தாபகர்களுக்கும் பல்கலைக் கழக சமூகத்தினருக்கும் எனது உளம் கனிந்த நன்றிகள்.

இந்தப் பல்கலைக்கழத்தின் உருவாக்கத்திற்கும் வளர்ச்சிக்கும் பல அர்ப்பணிப்புக்களையும் தியாகங்களையும் செய்த பலர் வெளியில் உள்ளனர். அவர்களையும் அழைத்து, இந்த விழாவினை மிகப் பிரமாண்டமான ஒரு விழாவாகக் கொண்டாடுவதற்கு நாம் எண்ணியிருந்தோம். ஆனால் நாட்டில் நிலவுகின்ற கொவிட்19 அசாதாரண சூழ்நிலை காரணமாக அது கைகூடாமல் போயுள்ளது. இந்த அசௌகரிய நிலையினை அவர்கள் அனைவரும் மனங்கொள்ளுவார்கள் எனக்கூறி எனது உரையினை நிறைவு செய்கின்றேன் என்றார்.



# புலிகளின் பெயரைக்கூறி மீண்டும் தமிழ்தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களை கொல்லப் போகிறார்களா?

## பா.அரியநேத்திரன் மு.பா.உ.

புலிகள் என தமிழ்தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களை நாடாளுமன்றில் சிங்கள பாராளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டி 2004, ம் ஆண்டு தமிழ்தேசிய்கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் படுகொலை செய்யப்பட்ட்நிலமையை மீண்டும் உருவாக்க போகிறார்களா? அல்லது சிறையில் அடைக்கப்போகிறார்களா? புலிகளின் பெயரை உச்சரிக்காமல் இனவாத ஆட்சியை கொண்டு செல்ல்முடியாது எனவும் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தமிழரசு கட்சி ஊடக செயலாளரும், பட்டிருப்பு தொகுதி இலங்கை தமிழரசு கட்சி தலைவருமான பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் சில சிங்கள பாராளுமன்ற உறுப்பினர்கள் தமிழ்தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களை புலிகள் (கொட்டியா) என கூறிய கருத்து தொடர்பாக மேலும் கருத்து கூறுகையில்.

கடந்த 2004.ம் ஆண்டு 22,தமிழ்தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களாக நாம் இருந்தவேளையில் அப்போது இருந்த ஏனய சிங்கள பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொரு பாராளுமன்ற விவாதங்களிலும் நாம் உரையாற்றும்போது தொடர்ந்து எம்மை பார்த்து புலிகள் என முத்திரை குத்தி அமர்வு வேளைகளில் எம்மை குழப்பியவரலாறுகள் தமிழ்தேசிய கூட்டமைப்புக்கு மட்டுமே உண்டு.

அப்படி அவர்கள் கதைக்கிறார்கள் என நாம் கவலை கொள்ளவில்லை எமது உண்மையான வடக்கு கிழக்கு தாயகத்தில் இடம்பெறும் பிரச்சனைகளை எல்லாம் ஆதாரங்களுடன் முன்வைக்கும் போதெல்லாம் நாம் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் பதில் தரமுடியாத இனவாதிகள் எம்மை பார்த்து புலிகள் என்று கூறிய பல வரலாறுகள் பல உண்டு.

அப்படி கூறியது ஒருபக்கம் இருந்தாலும் எமது மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களான மாமனிதர்களான மட்டக்களப்பு ஜோசப்பரராசசிங்கம், யாழ்ப்பாணம் ரவிராஜ், மற்றும் சிவனேசன் ஆகியோர் 2004, தொடக்கம் 2009, வரையான காலப்பகுதியில் மட்டக்களப்பு, கொழும்பு தலைநகர், வன்னி ஆகிய இடங்களில் படுகொலைசெய்யப்பட்டனர்.

இவைகளை விடவும் 22, தமிழ்தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களைப்புலிகள் முத்திரை குத்தப்பட்டு வடக்கு கிழக்கு மாகாணங்களில் அவர்களின் சொந்த மாவட்டங்களுக்கு செல்ல்முடியாமல் அவர்களின் உறவினர்களை கடத்தி 2006, வரவு செலவு திட்ட இறுதி வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமல் தடுத்த வரலாறுகளும் இலங்கை பாராளுமன்ற வரலாற்றில் தமிழ் தேசிய்கூட்டமைப்புக்கு மட்டுமே உண்டு.

தமிழ்தேசிய கூட்டமைப்பு சோரம் போகாகமல் நேர்மையாக உறுதியுடனும் உண்மையுடனும் செயல்படும்போது வடக்கு கிழக்கு மாகாணங்களில் மேற்கொள்ளப்படும் நில அபகரிப்புகள், திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்கள்,திட்டமிட்ட கைதுகள் பயங்கரவாத தடைச்சட்டமூலம் பாதிப்புறும் தமிழ் மக்கள், காணாமல் ஆக்கப்பட்டோர்களுக்கான நீதி விடயங்களை சுட்டிக்காட்டும் போது புலிகள் என எமக்கு விரல் நீட்டி கேலிசெய்வது 2004 தொடக்கம் 2015, வரை மிக அதிகமாக இருந்தது.

ஆனால் 2015, தொடக்கம் 2020, வரை ஐந்து வருடங்கள் நல்லாட்சி அரசில் இவ்வாறு புலி முத்திரை எமது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு குத்தப்படவில்லை ஏனெனில் நல்லாட்சி அரசில் எதிர்கட்சியாக இருந்தாலும் ஆளும் தரப்புடன் இணைந்து சில அபிவிருத்தி வேலைகளை செய்தமையால் இனவாதம் உள்ளே இருந்தாலும் வெளியில் பகிரங்கமாக காட்டப்படவில்லை என்பது உண்மைமட்டுமல்ல உயிர்நீத்த உறவுகள், மாவீரர் நினைவுகள், படுகொலை நினைவுகள், முள்ளிவாய்க்கால் நினைவுகள் எல்லாம் தடைகள் இன்றி செய்யக்கூடிய சூழல்களும் இருந்தன.

ஆனால் 2020 தற்போதய ஜனாதிபதி கோட்டபாய பதவி ஏற்று அதன்பின்னர் இடம்பெற்ற பொதுத்தேர்தல் புதிய அரசு உருவாக்கப்பட்ட பின்னர் மீண்டும் இனவாதப் பேச்சுகளும் தமிழ்தேசிய்கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களை புலிகள் என முத்திரை குத்துவதும் தொடர்கிறது.

இந்த ஆட்சியாளர்களின் இனத்துவேசத்தை சர்வதேச சமூகம் புரிந்து கொள்ள வேண்டும் எனவும் மேலும் கூறினார்.

# மேலதிக அரச அதிபர் வி.ஜெகதீசனின் வேண்டுகோளுக்கு இணங்க புதிய வீடு



(எஸ்.சபேசன்)

அம்பாரைமாவட்ட மேலதிக அரச அதிபர் வி.ஜெகதீசன் அவர்களது வேண்டுகோளுக்கு இணங்க சிவன் அருள் பவுண்டேசன் அமைப்பினது நிதி அனுசரணையில் பெரியநீலாவணையில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் ஒரு குடும்பத்திற்கு வீடு அமைத்துக் கொடுப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அம்பாரை மாவட்ட மேலதிக அரச அதிபர் வி.ஜெகதீசன் தலைமையில் இடம்பெற்றது.

இவ் அமைப்பின் மூலம் வறுமையினால் வீடு இன்றி வாழ்ந்து கொண்டிருந்த இக்குடும்பத்தினை இனங்கண்டு 3,50000.00 பெறுமதியில் இவ் வீடு அமைத்துக் கொடுக்கப்பட இருக்கின்றது.இதில் முதல் கட்டமாக ஒரு இலட்சம் பெறுமதியான காசோலை வழங்கி வைக்கப்பட்டது

இந்நிகழ்வில் அம்பாரைமாவட்ட மேலதிக அரச அதிபர் வி.ஜெகதீசன், சிவன் அருள் பவுண்டேசன் அமைப்பினது பணிப்பாளர் வாமதேவன்,இந்துக்கலாசார உத்தியோகத்தர் ஜெயராஜ் தொழில்நுட்ப உத்தியோகத்தரும் சமூகசேவகருமான எஸ்.சிறிரங்கன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

# வீடுகளை பூரணப்படுத்த முடியாத நிலையில் பயனாளிகள் தட்டிக்கழிக்கும் அரசாங்கத்தின் பிரதிநிதிகள்





கடந்த நல்லாட்சி அரசாங்க காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட வீட்டுத் திட்டங்களை பூரணப்படுத்த முடியாத நிலையில் தாம் இருப்பதாக வுவணதீவு பிரதேச செயலகப் பிரிவிற்குள் அமைந்துள்ள மகிழவட்டவான் மற்றும் நரிப்புல் தோட்ட கிராமங்களின் பயனாளிகள் தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் இந்த அரசாங்கமோ, அரசாங்கம் சார்ந்த பிரதிநிதிகளோ எதுவித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை எனவும் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட வீட்டுத் திட்டங்களில் பல வீடுகள் அடிக்கல் நடப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட நிலையிலேயே காணப்படுகின்றமை தொடர்பில் குறித்த வீட்டுத்திட்டத்திங்களின் பயனாளிகள், அப்பிரதேசத்துக்கு விஜயம் செய்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசனின் கவனத்திற்கு கொண்டு வந்திருந்தனர். குறித்த வீடுகளை பூரணப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை முன்னாள் வீடமைப்பு நிர்மானத்துறை அமைச்சரும், தற்போதைய எதிர்க்கட்சி தலைவருமான சஜித் பிரேமதாசவின் கவனத்திற்கு கொண்டு சென்று தமக்குரிய நிதிகளை ஒதுக்கித்துமாறும் வேண்டுகோள் விடுத்தனர்.

இதன்போது மேலும் கருத்து தெரிவித்த பயனாளிகள், கடந்த நல்லாட்சிக் காலத்தில் அமைச்சர் சஜித் பிரேமதாசவின் மூலம் தமக்கான வீடுகளை நிர்மானித்துக் கொள்ளும் வகையில் முதற் கட்ட நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டு அதன் ஊடாக தாம் கட்டுமானப் பணிகளை ஆரம்பித்திருந்ததாகவும், இருந்தும் ஆட்சி மாற்றத்தின் பின்னர் அடுத்த கட்ட நிதிகள் ஒதுக்கப்படாமையால் அவ்வீடுகளை பூரணப்படுத்த முடியாத நிலையில் தாம் இருப்பதாகவும் தெரிவித்தனர்.

மேலும் கட்டுமானப் பணிகளை தொடருங்கள் அரசாங்கமானது மிகுதி பணத்தினை தரும் எனும் அதிகாரிகளின் உத்தரவாதத்தினை நம்பி தமது உடமைகளை விற்றும் நகைகளை அடமானம் வைத்தும் இப்பணிகளை முன்னெடுத்தாகவும், இருந்தபோதும் தமது வறுமையின் காரணமாகவும், பொருட்களின் விலை ஏற்றத்தின் காரணமாகவும் அதனை முழுமையாகப் பூரணப்படுத்த முடியாமையால் தொடர்ந்தும் தமது குழந்தைகளுடன் குடிசை வீடுகளிலேயே வசித்து வருவதாகவும், இதனால் மழை காலங்களில் தாம் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாகவும் கவலை வெளியிட்டனர்.

அத்துடன், கடந்த தேர்தலின் போது வீடுகளை பூரணப்படுத்தி தருவோம்?? என வாக்குறுதிகளை வழங்கி சென்ற தற்போதைய அரசாங்க தரப்பு மக்கள் பிரதிநிதிகள் உள்ளிட்டவர்களிடம் முறையிட்டும் அது தொடர்பில் அவர்கள் எதுவித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என்றும், கடந்த ஆட்சிக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட திட்டம் என்பதால் தாம் தொடர்ந்தும் தட்டிக் கழிக்கப்பட்டு வருவதாகவும் விசனம் தெரிவித்ததோடு இது தொடர்பில் தமக்கான வீட்டுத் திட்டங்களை வழங்கிய முன்னாள் வீடமைப்பு நிர்மானத்துறை அமைச்சரும், தற்போதைய எதிர்க்கட்சி தலைவருமான சஜித் பிரேமதாசவின் கவனத்திற்கு கொண்டு சென்று தமக்குரிய நிதிகளை ஒதுக்கித் தருமாறும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர், கடந்த நல்லாட்சி காலத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் விடுத்த கோரிக்கையின் பிரகாரம் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான வீடுகள் கொத்தணி அடிப்படையில் கட்டம் கட்டமாக ஆரம்பிக்கப்பட்டு அவற்றில் பல முழுமைப் படுத்தப்பட்டு உரிய பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டதாகவும், இருந்தபோது இறுதியாக ஆரம்பிக்கப்பட்ட திட்டங்களில் பகுதியாளவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடுகளுக்கு தற்போதைய அரசாங்கமானது நிதி ஒதுக்கீடுகளை செய்யாது, கிராம சேவகர் பிரிவிற்கு ஓரிரு வீடுகளை அமைத்துக் கொடுத்து வருவதாகவும் கடந்த அரசாங்கம் ஆரம்பித்த வேலைதிட்டம் என்பதற்காக இந்த அரசாங்கம் இப்படிப்பட்ட மக்களை பழிவாங்க முடினையக் கூடாது என்றும் இது தொடர்பில் அரசாங்கம் சார்பான பிரதிநிதிகள் கட்டாயம் கவனம் செலுத்த வேண்டும் எனவும் தெரிவித்ததோடு இவ்விடயத்தினை எதிர்க்கட்சி தலைவரின் கவனத்திற்கும் தாம் கொண்டு உரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பதாகவும் உறுதியளித்தார்.

# நல்லாட்சி அரசாங்கத்தால் தும்பாலை சோலை கிராமத்திற்கு வழங்கப்படாத மின்சார வசதியினை பெற்றுதர நடவடிக்கை





(ந.குகதர்சன்)

மட்டக்களப்பு ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலக பிரிவிட்குட்பட்டதும் பாலைச்சோலை கிராமத்தில் கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் திட்டமிடபடாத 25 வீடுகளை கொண்ட மீள்குடியேற்றத்தில் உள்ள மக்கள் எந்தவித அடிப்படை வசதியுமின்றி அங்கு காட்டுயானை உயிர் அச்சுறுத்தலுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர்.

தொடர்ச்சியாக அப்பகுதியில் கடந்த சில நாட்களாக காட்டுயானை அப்பகுதியில் அவர்களது வேலிகளை உடைத்தும் அங்குள்ள பயன்தரும் மரங்களை சேதப்படுத்தியும் வருவதனால் அப்பகுதி மக்கள் உயிர் அச்சுறுத்தலுக்கு மத்தியில் தமது குழந்தைகளை காப்பாற்றும் முகமாக பிரதான வீதியிலிருந்து மின்சார இணைப்பு பெற்று இருந்துள்ளனர்.

இன்று அதிகாலை சட்டவிரோத மின்னினைப்பு பெற்றதன் காரணமாக வீட்டுதிட்ட பயனாளிகள் அனைவரும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டுள்ளனர்.

கடந்த நல்லாட்சியில் சகல அடிப்படை வசதிகளும் செய்து தருவதாக வாக்குறுதியளித்து தங்களை இப் பகுதியில் மீள் குடியேற்றியதாகவும் ஆனாலும் அவை உரிய காலத்தில் கிடைக்காமையால் அப்பகுதி மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தமக்கு உரிய தீர்வை பெறுறுதருமாறு வீட்டுதிட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பாராளுமன்ற உறுப்பினர் சி.சந்திரகாந்தன் இவ் விடயத்தை கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதையடுத்து அவரது பணிப்பிற்கமைவாக சம்பவ இடத்திற்கு நேரில் சென்று பார்வையிட்ட தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் செயலாளர் பூ.பிரசாந்தன் அப் பகுதி மக்களுக்கு மின்சார சபை மூலமாக மின்னினைப்பு பெற்றுதர நடவடிக்கை முன்னெடுக்கவுள்ளதாக இங்கு கருத்து தெரிவித்தார்.

# கொரோனா வைரஸ் பரவலினால் இழந்த கல்வியை ஈடு செய்யும்





(க.ருத்திரன்)

கொரோனா வைரஸ் பரவலினால் இழந்த கல்வியை ஈடு செய்யும் தரம் 5 புலமைப் பரிசில் செயற்றிட்டம் மகிழ்ச்சி கரமான கற்றல் எனும் தொணிப் பொருளிலான செயலமர்வு கல்குடா கல்வி வலயத்திற்குட்பட்ட மீராவோடை சக்தி வித்தியாலயத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் என்.சுதாகரன் தலைமையில் நிகழ்வுகள் யாவும் இடம்பெற்றன. தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறவுள்ள இவ் செயலமர்வில் மாணவர்களுக்கான பல்வேறு கல்வி சார்ந்த செயற்பாடுகளான உள ஆற்றுகை,விளையாட்டு மூலமான கற்ப்பித்தல்,புலமை பரீட்சைக்கான பயிற்சிகள்.

அடைய வேண்டிய திறன்கள் என்பன போன்ற கல்வி செயற்பாடுகள் இடம்பெறவுள்ளன.

மட்டக்களப்பு ‘ NOW WOW CHRITY‘ என அழைக்கப்படும் புதிய சந்தர்ப்பங்கள் அமைப்பினால் இவ் கற்றல் கற்ப்பித்தல் செயற்பாடுகள் கிண்ணையடி சரஸ்வதி வித்தியாலயம்,கறுவாக்கேணி விக்னேஸ்வரா வித்தியாலயம் மற்றும் மீராவோடை சக்தி வித்தியாலயம் போன்ற பாடசாலைகளில் 5ஆம் தரத்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந் நிகழ்வில் கல்குடா வலயக் கல்விப் பணிப்பாளர் தினகரன் ரவி,உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.யோகராசா அகியோர்கள் கலந்து கொண்டு மாணவர்களுக்கு அறிவுரை வழங்கினார்கள்.

# தென்கிழக்கு பல்கலையின் புதிய உபவேந்தரை பாராட்டி கௌரவித்த சம்மாந்துறை மண்ணும் மக்களும்

(நூருல் ஹுதா உமர், எம்.என்.எம்.அப்ராஸ் )

இலங்கையின் தேசிய சொத்தாக இருக்கின்ற தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் புதிய உபவேந்தராக அண்மையில் ஜனாதிபதி கோத்தாபாயவினால் நியமிக்கப்பட்டுள்ள அப்பல்கலைக்கழகத்தின் பழைய மாணவர் பேராசிரியர் கலாநிதி றமீஸ் அபூபக்கரை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு சம்மாந்துறையில் அமைந்துள்ள ஜனாதிபதி விளையாட்டரங்கில் வரலாற்றில் ஓர் ஏடு புகழ் மௌலவி ஏ.சி.ஏ. எம். புஹாரி தலைமையில் சனிக்கிழமை இரவு இடம்பெற்றது.

சம்மாந்துறை மக்களின் சார்பாக சம்மாந்துறை வெளியீட்டு பணியகம் ஏற்பாடு செய்த இந்நிகழ்வில் சம்மாந்துறை பிரதேச சபை தவிசாளர் ஏ.எம். எம்.நௌசாத், இறப்பர் அபிவிருத்தி திணைக்கள மேலதிக பணிப்பாளர் நாயகம் ஐ.எம். ஹனீபா, கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பளார் டாக்டர் ஏ.ஆர்.எம். தௌபீக், தென்கிழக்கு பல்கலைக்கழக கலை, கலாச்சார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில், தென்கிழக்கு பல்கலைக்கழக அரசியல் விஞ்ஞான துறைத்தலைவர் எம்.ஏ.எம். பௌசர், முதுநிலை பேராசிரியர் றமீஸ் அப்துல்லாஹ், தென்கிழக்கு பல்கலைக்கழக ஸ்தாபக பதிவாளர் ஜௌபர் ஸாதிக், சம்மாந்துறை மஜ்லிஸ் அஸ்ஸுறா அமீர் மௌலவி கே.எல்.ஆதம்பாபா, சம்மாந்துறை ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டாக்டர் அஸாத் எம். ஹனீபா, தென்கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர்கள், நூலகர், உத்தியோகத்தர்கள், பிரதேச வர்த்தகர்கள், ஊர் பிரமுகர்கள், மற்றும் கல்வியலாளர்கள் நலன்விரும்பிகள் என பலரும் கலந்து கொண்டனர்.



நாள் தோறும்
சுபீட்சம் மின்னிதழை
பார்வையிட
www.supeedsam.com

SAYENTHIRAN KATHIR
Geschäftsführer
S TRAVEL
Flugtickets | Hotels | Reiseversicherungen
Luisenstr 21 8005 Zurich | info@stravel.ch www.stravel.ch
044 419 91 00 079 913 77 59

உதயகுமார் கல்வி நிலையம்
முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை
தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923
n.uthayakumar1981@gmail.com

"கல்விக்கு கைகொடுப்போம்"
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமூகத்தை
கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.
ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206

SHELVA SWISS
YOUR FUTURE OUR VISION
041 790 64 63 079 514 64 28
வீட்டுக்கடன் 0.62% தொடக்கம்
10% இல் சொந்த வீடு கட்ட அல்லது வாங்க
- இருக்கும் வீட்டை வைத்து இன்னொரு வீட்டை வாங்க...
- வீடு வாங்க, விற்க, கட்ட, திருத்த...
- வீடு வாங்குவதற்கான ஆயுட்காப்புறுதி
- Architect வேலைகள்
இலங்கையில் வீடுகள், காணிகள், விற்க, வாங்க, கட்ட, திருத்த
இலங்கைக்கு போக வேண்டிய தேவை இல்லை.
SWISS இல் இருந்து கொண்டே செய்யலாம்.
» கிறங்கன்காசே » பயணக்காப்புறுதி
» ஆயுட்காப்புறுதி » சட்டக் காப்புறுதி


கிழக்கிலங்கையின் காரைதீவில் வெளிநாட்டு
துரித பொதிகள் சேவையில் புதிய பரிணாமம்




வெளிநாட்டில் இருக்கும் உங்கள்
உறவுகள் நண்பர்களுக்கு பொதிகள்
மற்றும் ஆவணங்களை துரித
வேகத்தில் உரிய முகவரியில்
கொண்டு சேர்க்க
இன்றே நாடுங்கள்
TA ENTERPRICES & CO வின்
TA PARCEL.LK

| | |
|---|---|
| துரித வேகம். | London, Swiss, France, Canada 3 Days Only) Quick Service |
| உலகின் எப்பாகத்திற்கும் பொதிகள் அனுப்பும் வசதி. | All Countries |
| பொதிகள் முழு (100%) காப்புறுதி செய்யப்படுகின்றது. | 100% Insured |
| 365 நாட்கள் 24 மணி நேர வாடிக்கையாளர்கள் சேவை. | 365 Days 24 Hours Service |
| உரிய முகவரியில் கொண்டு சேர்க்கப்படும். | Door to Door Delivery |
| இணையத்தளம் மூலம் உங்கள் பொதிகள் எங்கு உள்ளது என கண்டறியும் வசதி. | Online Tracking System |
| சிறந்த பொதியாக்கம். | Quality Packing |

நீங்கள் பொதிகள் ஒப்படைக்கும் போதே Traking Number வழங்கப்படும்.
இவ்வாறான நம்பகதன்மைகளுடன் உங்கள் உறவுகளின் எதிர்பார்ப்புகளை கொண்டு சேர்க்கின்றோம்.
எங்கள் நிறுவனத்தின் ஊடாக பொதிகள் அனுப்பும் ஒவ்வொரு வாடிக்கையாளர்களுக்கும் பெறுமதியான பரிசில்கள் மற்றும் அன்பளிப்புகள் காத்திருக்கின்றது.
அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு விசேட விலைக்கழிவு.
வெளிநாடுகளில் இருந்து அனுப்பப்படும் பொதிகளையும் இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
TA PARCEL.LK | Main Street Karaithivu | taparcel.lk@gmail.com, +94774385151, +94752542651




PIZZA NACH WAHL, TANDOORI, FISCH SPL.
BBQ GRILL, BIRIYANI SPL., CURRY GERICHTE,
PARTYSERVICE.
Bestellung Number
044 260 2222
079 563 2222
www.restaurant-grunau.ch
info@restaurant-grunau.ch
Uber Eats
TWINT

# திருகோணமலையில் கனிஷ்ட பிரிவு பாடசாலைகள் இன்று ஆரம்பம்

**(திருகோணமலை ரவ்பீக் பாயிஸ்)**

நாட்டில் உள்ள அனைத்து கனிஷ்ட பிரிவு பாடசாலைகளும் இன்று திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது

இவ்வாறு சுகாதார வழிகாட்டுதல்களின் கீழ் 200க்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள் முதல்கட்டமாக கடந்த 21ஆம் திகதி ஆரம்பமானது.

இரண்டாம் கட்டமாக 200க்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் 40க்கும் மேற்பட்ட மாணவர்கள் கொண்ட வகுப்புகளை நடத்தும் போது மாணவர்களை பகுதி பகுதியாக அழைத்து கற்றல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பாடசாலையின் அதிபர்களுக்கு முழுமையான அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் விரைவில் முழுமையாக வகுப்புகள் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கல்வியமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்

அதனப்படையில் திருகோணமலை ஸாஹிரா தேசிய பாடசாலையில் நாளை பாடசாலை ஆரம்பிப்பதற்கான வேலைத் திட்டத்தின் ஆரம்ப கட்டமாக கல்லூரியின் அதிபர் ஏ.எஸ்.அலி சப்ரி அவர்களின் வழிகாட்டலில் ஆரம்ப பிரிவு அதிபர் மர்லியா சக்காப் அவர்களின் தலைமையில் சிரமதான நிகழ்வு இன்று இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மாணவர்கள் கை கழுவுவதற்கான வசதி, வகுப்பறையில் மாணவர்கள் சமூக இடைவெளியுடன் இருப்பதற்கான ஏற்றப்பாடுகள் என்பன ஆராய பட்டத்துடன் வகுப்பறைகளும் சுத்தம் செய்யப்பட்டது.

இவ் சிரமதான நிகழ்வில் கல்லூரின் அதிபர் ஏ.எஸ்.அலி சப்ரி, ஆரம்ப பிரிவு அதிபர் மர்லியா சக்காப், வகுப்பாசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டதுடன் மாணவர்களுக்கு சீருடை கட்டாயம் இல்லை எனவும் சாதரண உடையில் பாடசாலைக்கு சமூகமளிக்க முடியுமெனவும் மாணவர்களுக்கு காய்ச்சல், தடிமன், இருமல் போன்ற ஏதேனும் நோய்கள் காணப்படுமே ஆனான் பாடசாலைக்கு அனுப்ப வேண்டாம் எனவும் மாணவர்களின் நோய் தொடர்பில் வகுப்பாசிரியர்களுக்கு தெரியப்படுத்துமாறும் கனிஷ்ட பிரிவு அதிபர் மர்லியா அவர்களினால் பெற்றோர்களுக்கு ஆலோசனையும் வழங்கபட்டது.

மேலும் திருகோணமலை பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரிகளினால் கல்லூரி மேற்ப்பார்வையிடப்பட்டு டெங்கு நோய் பரவாமல் இருக்க கல்லூரி வளாகம் மற்றும் வகுப்பறைகளுக்கு டெங்கு புகை விசிறப்பட்ட்டதும் குறிப்பிடத்தக்கது.

# காரைதீவில் சாதாரண மாணவர்களுக்கு பைசர் தடுப்பூசி வழங்கும்பணி



**(காரைதீவு நிருபர்)**

காரைதீவு பிரதேசத்திற்குட்பட்ட பாடசாலைகளில், இம்முறை க.பொ.த.சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களுக்கான பைசர் ரக தடுப்பூசி இன்று(25) திங்கட்கிழமை ஏற்றப்படவிருப்பதாக காரைதீவுப் பிரதேச சுகாதாரவைத்திய அதிகாரி டாக்டர் தஸ்லிமா பஷீர் தெரிவித்தார்.

காரைதீவுக்கோட்டத்திலுள்ள காரைதீவு விபுலாநந்த தேசிய கல்லூரி மற்றும் இ.கி.மி.பெண்கள் பாடசாலையில் இன்று காலைவேளையிலும், காரைதீவு சண்முகா மகாவித்தியாலயம் மாவடிப்பள்ளி அல் அஷ்ரப் மகாவித்தியாலயத்தில் பிற்பகல்வேளையிலும் ,16வயது மற்றும் 17வயதுக்குட்பட்ட மாணவர்களுக்காக இத்தடுப்பூசிகள் ஏற்றப்படவிருக்கின்றன.

காரைதீவுப்பிரதேசத்தில் பிரதேச சுகாதாரவைத்திய அதிகாரி டாக்டர் தஸ்லிமா பஷீர் தலைமையில் இடம்பெறவிருக்கும் இவ் வேலைத்திட்டத்தில் சுமார் 220 மாணவர்கள் இன்று(25) இத்தடுப்பூசிகளைப்பெறவிருக்கின்றனர்.

இதேவேளை, உயர்தர மாணவர்களுக்கான பைசர் ரக தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டம் கடந் 3தினங்களாக நடைபெற்றுவந்தது. இதுவரை 300மாணவர்கள் இதனைப்பெற்றுள்ளார்கள் என வைத்தியஅதிகாரி தஸ்லிமா பஷீர் மேலும் தெரிவித்தார். 1819வயதுக்குட்பட்ட உயர்தர மாணவர்களுக்கான இத்தடுப்பூசிகள் காரைதீவு விபுலாநந்த தேசிய கல்லூரி காரைதீவு சண்முகா மகாவித்தியாலயம் ஆகிய இரு பாடசாலைகளிலும் காலை 8மணிமுதல் மாலை 4மணி வரை ஏற்றப்பட்டது.

இந்த இருதினங்களிலும் ஏற்றத் தவறிய மாணவர்களுக்கு கடந்த சனிக்கிழமை காரைதீவு சுகாதாரவைத்தியஅதிகாரி பணிமனையில் ஏற்றப்பட்டது.

எனவே குறித்த வயதுக்குட்பட்ட 300 மாணவர்களும் இந்த பைசர் ரக தடுப்பூசியைப் குறித்ததினங்களில் பெற்றுக்கொண்டார்கள் மேலும் 16 -17வயதுக்குட்பட்டவர்களுக்கென தடுப்பூசி இன்று வழங்க ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளதாகவும் குறித்த மாணவர்கள் தவறாது அதனைப்பெற்றுக் கொள்ளுமாறு காரைதீவு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தஸ்லிமா பஷீர் கேட்டுக்கொண்டுள்ளார்.




# நான்காண்டு நிறைவு விழா





**(எம்.ஏ.றமீஸ்)**

அக்கரைப்பற்று லீடர் அஷ்ரஃப் கனிஷ்ட கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு நான்காண்டு பூர்த்தியினையொட்டி ஏற்பாடு செய்யப்பட்ட வைபவம் பாடசாலை வளாகத்தில் நேற்று(24) இடம்பெற்றது.

அதிபர் கே.எல்.நைஸர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எம்.சி.எல்.பெர்ணாண்டோ பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

பாடசாலையின் அபிவிருத்திக் குழு செயலாளர் எஸ்.எம்.லாபீரின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது இப்பாடசாலையில் கல்வி வயிலும் அனைத்து மாணவர்களுக்கும் 2022 ஆம் கல்வியாண்டுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இதேவேளை, பாடசாலையின் நான்காண்டு நிறைவையொட்டி நிகழ்வின் நினைவாக பாடசாலை வளாகத்தில் பயன்தரும் பல மரங்கள் அதிதிகளால் நட்டு வைக்கப்பட்டன. இதுதவிர, இப்பாடசாலையின் உருவாக்கத்திற்கும், பாடசாலையின் வளர்ச்சிக்கும் உதவிகள் புரிந்த துறைசார் உயரதிகாரிகள் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு இதுவரை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக செயற்பட்டு வரும் பாடசாலை ஆசிரியர்கள் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டதுடன், பாடவிதான மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் திறமை காட்டிய மாணவர்கள் பலரும் இதன்போது பாராட்டி பரிசில்கள் வளங்கிக் கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# சவளக்கடை ஏழாம் கிராமத்தில் கனடா ten டீப்பின் உலருணவு நிவாரணம்




**( வி.ரி.சகாதேவராஜா)**

நாவிதன்வெளி பிரதேசசெயலகத்திற்குட்பட்ட பின்தங்கிய ஏழாம்கிராம மக்களுக்கு ஒரு தொகுதி உலருணவு நிவாரணம் நேற்று (24) ஞாயிற்றுக்கிழமை வழங்கி வைக்கப்பட்டது.

அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் விடுத்த வேண்டுகோளுக்கமைவாக கிழக்கின் பிரபல சமுகசெயற்பாட்டாளரும் காரைதீவு பிரதேசசபைத்தவிசாளருமான கிருஸ்ணபிள்ளை ஜெயசிறிலினூடாக வழங்கிவைத்தார்.

கனடா நாட்டிலுள்ள ' ten ¨ ' நிறுவனம் இதற்கான நிதிஅனுசரணையை கிழக்கின் பிரபல சமுகசெயற்பாட்டாளரும் காரைதீவு பிரதேசசபைத்தவிசாளருமான கிருஸ்ணபிள்ளை ஜெயசிறிலினூடாக வழங்கியுள்ளது.

இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் கலந்துகொண்டுரையாற்றியதுடன் நிவாரணப்பொதிகளை வழங்கிவைத்தமை விசேட அம்சமாகும்.

கொரோனாத் தொற்றினால் வாழ்வாதாரத்தை இழந்த ஒரு தொகுதி(500குடும்பங்கள்) அம்பாறை மாவட்ட மக்களுக்கு 1மில்லியன் ருபா(10லட்சருபா) செலவில் உலருணவு நிவாரணம் வழங்கும் வேலைத்திட்டத்தின் ஓரங்கமாகவே இது நடைமுறைப்படுத்தபட்டது.

வேலைத்திட்ட ஒருங்கிணைப்பாளரும் பிரபல சமுகசெயற்பாட்டாளருமான வி.ரி.சகாதேவராஜா தலைமையில் இந் நிவாரணவிநியோகம் இடம்பெற்றது. நிகழ்வில் தொழில்நுட்ப உத்தியோகத்தர் எஸ்.சிறிரங்கன் ஆசிரியர்களான இராஜேந்திரன் . வாமதேவன் ஆகியோரும் கலந்து கொண்டனர். கனடா நாட்டிலுள்ள 'ரு டீப் ' நிறுவனம் இதற்கான நிதிஅனுசரணையை கிழக்கின் பிரபல சமுகசெயற்பாட்டாளரும் காரைதீவு பிரதேசசபைத்தவிசாளருமான கிருஸ்ணபிள்ளை ஜெயசிறிலினூடாக வழங்கியுள்ளது.

முன்னதாக திருக்கோவில் பிரதேசத்திலுள்ள மிகவும் பின்தங்கிய மண்டானை தங்கவேலாயுதபுரம் கஞ்சிகுடிச்சாறு; திராய்க்கேணி மற்றும் அட்டப்பள்ளம் ஆகிய கிராம மக்களுக்கு இத்திட்டத்தின்கீழ் ஏலவே உலருணவு நிவாரணம் வழங்கும் பணி முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

நிகழ்வில் மக்கள்; கலந்து கொண்டு வழங்கிவைத்தனர். இறுதியில் கிராமமக்கள் நன்றியுரைத்தனர்.

# திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி 125 ஆவது வருட பூர்த்தியை முன்னிட்டு மர நாடுகை






**(கதிரவன் திருகோணமலை)**

திருகோணமலை சிறி கோணேஸ்வரா இந்துக்கல்லூரி 125வது வருடத்தில் தடம் பதித்துள்ளது.

இதனை முன்னிட்டு பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

எதிர்கால பசுமை உலகம் அமைப்பு கல்லூரி மைதானத்தில் 125 மரக்கன்றுகளை நடும் செயற்திட்டத்தை அங்குரார்பணம் செய்துள்ளது.

ஞாயிற்றுக்கிழமை 2021.10.24 முதல் கட்டமாக 11 மரக்கன்றுகள் முன்னாள் அதிபர்களாலும் பழைய மாணவர்களாலும் நட்டு வைக்கப்பட்டது.

பழைய மாணவர் சங்கத்தின் அழைப்பில் இந்நிகழ்வு நடைபெற்றது.




# வரலாற்றை மீட்டிப்பார்த்த இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வெள்ளி விழா நிகழ்வு

(நூருல் ஹுதா உமர்)

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 25 ஆண்டுகள் நிறைவினை சிறப்பிக்கும் வெள்ளி விழா நிகழ்வுகளும், பல்கலைக்கழக ஸ்தாபகர் தின சிறப்புரையும் கொவிட்-19 சுகாதார வழிகாட்டல்களுக்கமைய சனிக்கிழமை பல்கலைக்கழக மாநாட்டு மண்டபத்தில் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தலைமையில் இடம்பெற்றன.

பொறியியல் பீடத்தின் பீடாதிபதி கலாநிதி எஸ்.எம். ஜுனைடீனின் வரவேற்புரையுடன் ஆரம்பமான இந்நிகழ்வில் பல்கலைக்கழகத்தின் ஸ்தாபக உபவேந்தர் பேராசிரியர் எம்.எல்.ஏ. காதரின் உரை வாசிக்கப்பட்டது. தொடர்ந்து ஸ்தாபக பதிவாளர் ஏ.எல். ஜௌபர் சாதிக், ஸ்தாபக நிதியாளர் குலாம் றஷீத் ஆகியோரது உரைகளும் இடம்பெற்றன. இவர்களது உரையினை அடுத்து பல்கலைக்கழகத்தின் மூத்த பேராசிரியர் றமீஸ் அப்துல்லாவினால் பல்கலைக்கழக வெள்ளி விழா சிறப்புரை இடம்பெற்றது. இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கடந்த 25 ஆண்டுகால கல்விப் பயணம் குறித்தும் அதன்போதான அடைவுகள், எதிர்காலத்தில் இப்பல்கலைக்கழகம் பயணிக்க வேண்டிய பாதை உள்ளிட்ட விடயங்களை அவரது உரை குறிப்புணர்த்தியது.

உபவேந்தர் உரையினைத் தொடர்ந்து, வெள்ளி விழா நினைவு மலர் அதன் பதிப்பாசிரியரும் நூலகருமான எம்.எம். றிபாயுடீனினால் வெளியிட்டு வைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து 2020ஆம் ஆண்டுக்கான உபவேந்தர் விருதுகளை கலை கலாசார பீடத்தினைச் சேர்ந்த பேராசிரியர் எம்.எம். பாஸில், கலாநிதி எஸ்.எம். அய்யூப், முகாமைத்துவ வர்த்தக பீடத்தினைச் சேர்ந்த பேராசிரியர் கே.எம். முபாறக், பேராசிரியர் எஸ். சப்றாஸ் நவாஸ், பேராசிரியர் எம்.ஐ.எம். ஹிலால், தொழில்நுட்ப பீடத்தினைச் சேர்ந்த கலாநிதி யு.எல்.ஏ. மஜீட், கலாநிதி எம்.ஜீ.எம். தாரிக், கலாநிதி ஏ.என்.எம். முபாறக், கலாநிதி ஏ.டீ.என்.ரீ. குமார, கலாநிதி முனீப் எம். முஸ்தபா ஆகியோர் பெற்றுக் கொண்டனர். மற்றும் 2021ஆம் ஆண்டுக்கான உபவேந்தர் விருது வழங்கலில், கலை கலாசார பீடத்தினைச் சேர்ந்த கலாநிதி ஏ.எம்.எம். நவாஸ், எம்.ஏ.எம். பௌசர், பொறியியல் பீடத்தினைச் சேர்ந்த பேராசிரியர் ஏ.எம். முஷாதிக் ஆகியோருக்கு உபவேந்தர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. இந்நிகழ்வில் இப்பல்கலைக்கழகத்தில் நீண்டகாலம் சேவையாற்றியவர்களுக்கான விருதுகளும் வழங்கப்பட்டன.

வெள்ளி விழா நிகழ்வோடு இணைந்ததாக வருடாந்த பல்கலைக்கழகத்தின் ஸ்தாபகர் தின சிறப்புரை நிகழ்த்தப்பட்டது. இச்சிறப்புரையினை பல்கலைக்கழக ஸ்தாபகரின் மருமகனும் வைத்தியருமான எம்.ஏ.எம். ஜெஸீம் அவர்கள் இணைய வழியினூடாக நிகழ்த்தியமை குறிப்பிடத்தக்கது. அவர் தனது உரையில், பல்கலைக்கழகத்தின் ஸ்தாபகரான மர்ஹூம் கலாநிதி எம்.எச்.எம். அஷ்ரஃப் அவர்களை நினைவுகூர்ந்ததுடன் அவரது





காத்திரமான பங்களிப்புக்கள் குறித்தும் சிலாகித்துப் பேசியிருந்தார். வெள்ளி விழா நிகழ்வின் அடுத்த முக்கிய விடயமாக, பல்கலைக்கழக நூலகத்திற்கான நூல்கள் பல அன்பளிப்பு செய்து வைக்கப்பட்டதுடன் பல்கலைக்கழகத்தின் ஆவணப் படமொன்றும் திரையிடப்பட்டது. உத்தியோகபூர்வ நிகழ்வுகள் முடிவுற்றதும் பல்கலைக்கழக நூலகத்தின் ஆவணக்காப்பக பிரிவு உபவேந்தரினால் திறந்துவைக்கப்பட்டதுடன் ஒரே மக்கள், ஒரே தேசம், ஒரே இலங்கை என்ற தொனிப்பொருளிலான புத்தகக் கண்காட்சியும் இடம்பெற்றது.

# இளைஞர்கள் இருவரை தாக்கிய ஏறாவூர் போக்குவரத்துப் பிரிவு பொலிஸ் கான்ஸ்டபிள் பிணையில் விடுவிப்பு

(ஏறாவூர் நிருபர்)

ஏறாவூரில் இளைஞர்கள் இருவரை தாக்கிய ஏறாவூர் போக்குவரத்துப் பிரிவு பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் பணிநீக்கம் செய்யப்பட்ட நிலையில் கைது செய்யப்பட்டு ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டதையடுத்து ஓரிலட்சம் ரூபா சரீரப்பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

இவர் மீதான வழக்கு விசாரணை எதிர்வரும் நவம்பர் மாதம் 10 ஆந்திகதி நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பொலிஸாரின் நிறுத்தல் சமிஞ்சையை மீறிச்சென்றமை சாரதி அனுமதிப்பத்திரம் இன்மை ஆகிய குற்றச்சாட்டுக்களின்பேரில் தாக்கப்பட்ட இளைஞர்கள்மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

வெள்ளிக்கிழமை மாலை ஏறாவூர்ப் பிரதான வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தொன்றினையடுத்து பொலிஸார் அவ்விடத்தினை அளவை செய்துகொண்டிருந்தவேளை மோட்டார் சைக்கிளில் அவ்வழியே மிகவேகமாகப் பயணம்செய்த இவ் வாலிபர்கள் அளவை நாடாவை பிய்த்துக்கொண்டு சென்றுள்ளனர். இதையடுத்து பொலிஸ் கான்ஸ்டபிள் அவர்களைத் துரத்திச்சென்று பிடித்து தாக்கியதாக தெரிவிக்கப்படுகிறது.

இதுதொடர்பான காணொளி சமூக வலயத்தளங்களில் வைரலாகப் பரவியமை குறிப்பிடத்தக்கது.

இதையடுத்து சம்பந்தப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிளுக்கெதிராக உடனடி நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் சரத் வீரசேகர பொலிஸ் மா அதிபருக்கு அவசர பணிப்புரை விடுத்திருந்தார்.







பாண்டிருப்பு கடற்கரையை அண்டிய பிரதேசம் கடலரிப்புக்கு உட்பட்டு வீதிகள் மற்றும் கட்டிடங்கள் அனைத்தும் சேதம் அடைந்துள்ளதை படத்தில் காணக்கூடியாதாக உள்ளது.

(சர்ஜூன் லாபீர்)

# நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிக்க செய்யும் ஆயுர்வேத பானம் முப்படையினருக்கும் இலவசமாக வழங்கி வைப்பு

(வி.சுகிர்தகுமார் )

ஜனாதிபதியின் ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களுக்கமைய கிழக்கு மாகாண ஆளுநரின்; அறிவுறுத்தல்களுக்கும் வழிகாட்டலுக்கும் இணைவாக கொரோனா தொற்று நோயை மக்கள் மத்தியிலிருந்து ஒழிக்கும் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் நிந்தவூர் மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலையினால் நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிக்கச்செய்யும் ஆயுர்வேத பானம் வழங்கும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த வேலைத்திட்டத்தின் ஒரு கட்டமாக பாரம்பரிய ஆயுர்வேத முறைகளுக்கமைய தயாரிக்கப்பட்ட உடலின் நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிக்கச்செய்யும் ஆயுர்வேத பானம் முப்படையினருக்கும் இலவசமாக வழங்கி வைக்கப்பட்டு வருகின்றது.

இதற்கமைவாக அம்பாரை மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் அமைப்பாளர் ஐ.எச்.எம்.வஹாப் ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வில் நிந்தவூர் மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் எம்.ஏ.நபீல் கலந்து கொண்டு முப்படையினருக்கும் சுவதாரணி மூலிகை பானம்; வழங்கும் பணியை ஆரம்பித்துள்ளார்.

இதன் ஒரு கட்டமாக இராணுவத்தின் அம்பாரை நீத்தை 11 ஆம் படைப்பிரிவின் தலைமையகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் நீத்தை முகாம் பொறுப்பதிகாரி லெப்டினன் கேணல் டபிள்யு டி. என்.டி. வீரசிங்க உள்ளிட்ட இராணுவ அதிகாரிகளிடம் ஒரு தொகை சுவதாரணி பொதியை வழங்கி வைத்தார்.

பின்னர் அம்பாரை மாவட்ட பிரதிப்பொலிஸ்மா அதிபர் பி.செனவிரத்னவிடமும் பொலிசாருக்கு வழங்கும் வகையில் ஒரு தொகை சுவதாரணி பொதியை கையளித்தார்.

நிகழ்வில் வைத்தியர் ஏ.சி. டில்சான் உள்ளிட்ட வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் பலர் கலந்து கொண்டனர்.





இதேநேரம் இதுவரையில் அம்பாரை மாவட்டத்தில் 160000 ஆயிரம் சுவதாரணி பைக்கற்றுக்கள் வழங்கப்பட்டுள்ளதாக நிந்தவூர் மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் எம்.ஏ.நபீல் தெரிவித்தார்.

# கிழக்கில் க.பொ.த சா.தர பரீட்சை பெறுபேற்றை அதிகரிக்க சூழ்நிலைப் பகுப்பாய்வு

## கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் வலய ரீதியாக நேரடி விஜயம்

(காரைதீவு நிருபர்)

கிழக்குமாகாணத்தில் க.பொ.த. சாதாரணதர பரீட்சைஅடைவுமட்டத்தினை அதிகரிக்கும்பொருட்டு பலவேலைத்திட்டங்களை முன்னெடுக்க கிழக்குமாகாண கல்வித்திணைக்களம் வேலைத்திட்டங்களை தயாரித்துள்ளது.

அதன் ஓரங்கமாக வலயரீதியான சூழ்நிலைப்பகுப்பாய்வொன்றை (Situation Report) மேற்கொள்ள கிழக்குமாகாண கல்விப்பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகம் தலைமையிலான உயர்கல்வி அதிகாரிகள் குழாத்தினர் வலயங்களுக்கு நேரடியாக விஜயம்செய்யவுள்ளனர்.

அதன்பொருட்டு 2021 மற்றும் 2022 ஆண்டுகளில் குறித்த வலயத்தில் க.பொ.த.சாத. பரீட்சைக்கு தோற்றவிருக்கின்ற மாணவர்கள் நிலைமை தொடர்பாக சூழ்நிலைப்பகுப்பாய்வொன்றை(Situation Report) முன்னெடுக்க வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

மாகாணக்கல்விப்பணிப்பாளர் தலைமையிலான குழாத்தினரின் விஜயத்தின்போது கல்விசார்உத்தியோகத்தர்கள், கோட்டக்கல்விப்பணிப்பாளர்கள், க.பொ.த.சாத.பாடசாலைகளின் அதிபர்கள் ஆகியோர் பிரசன்னமாயிருக்கவேண்டுமெனக் கேட்கப்பட்டுள்ளது.

பரீட்சை எழுதவிருக்கும் மாணவர்களுக்காக அந்தந்த வலயங்கள் முன்னெடுத்த, முன்னெடுக்கவிருக்கின்ற செயற்றிட்டங்கள் விசேட திட்டங்கள்



,கடந்த 5வருடகால பெறுபேறுகளின் பகுப்பாய்வுச்சுருக்கம் உள்ளிட்ட பல விடயங்கள் பாடரீதியாக ஆராயப்படவுள்ளன.அவை பல்லூடக (Powerpoint Presentation) முன்வைப்பாக காட்சிப்படுத்தப்படவேண்டும் என வலயக்கல்விப்பணிப்பாளர்களிடம் கேட்கப்பட்டுள்ளது.

அதிபர் மற்றும் கல்விசார் உத்தியோகத்தர்களதும் 2021ஆம் ஆண்டுக்கான செயலாற்றுகைதரங்கணிப்பீட்டுத்திட்ட அறிக்கைகளும்(Appraisal) சமர்ப்பிக்கப்படவேண்டும்.

அந்தவகையில், சம்மாந்துறைவலயத்திற்கான சூழ்நிலைப் பகுப்பாய்வுக்கூட்டம் எதிர்வரும் 27ஆம் திகதி புதன்கிழமை வலயக்கல்விப்பணிமனையில் சுகாதாரநடைமுறைக்கமைவாக நடைபெறவுள்ளது.

அன்றையதினம் கிழக்குமாகாண கல்விப்பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகம் தலைமையிலான உயர்கல்வி அதிகாரிகள் குழாத்தினர் வலயத்திற்கு விஜயம் செய்யவுள்ளதாக வலயக்கல்விபப்பணிப்பாளர் எம்.எஸ்.சஹதுல்நஜீம் அறிவித்துள்ளார்.

# போதையிலிருந்து புனர்வாழ்வு பெற்ற பஸ்தரிப்பு நிலையம்!



(காரைதீவு நிருபர்)

போதைப்பொருள் பாவனை போன்ற சட்டவிரோத செயற்பாடுகளின் கூடாரமாக செயற்பட்ட பஸ்தரிப்புநிலையமொன்று அவற்றிலிருந்து பூரணமாக விடுவிக்கப்பட்டு, வர்ணம் பூசி புதுப்பொலிவுடன் புனர்வாழ்வுபெற்ற பஸ்தரிப்புநிலையமாக மாற்றப்பட்டுள்ளது.

குறித்த பஸ்தரிப்புநிலையம் காரைதீவு தேவாலயத்திற்கு முன்னால் அமைந்துள்ளது.

கடந்த கொரோனா காலங்களில் போதைப்பொருள் பாவனையுள்ளிட்ட சமுகவிரோத செயற்பாடுகளினால் ஆக்கிரமிப்புக்குள்ளான இப்பஸ்தரிப்புநிலையத்தை முற்றாக விடுவிக்கவேண்டுமென காரைதீவு பிரதேசசபையின் சுயேச்சகை;குழு உறுப்பினர் சதாசிவம் சசிகுமார், பிரதேசசபைத்தவிசாளர் கிருஸ்ணபிள்ளை ஜெயசிறிலிடம் வேண்டுகோள்விடுத்திருந்தார்.

தவிசாளர் ஜெயசிறில் உடனடியாக செயற்பட்டு, சம்மாந்துறைப் பொலிசாருடன் தொடர்புகொண்டு அவர்களை வரவழைத்து சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்ததோடு நேற்றுமுன்தினம் சபையால் வர்ணம் பூசி புதுப்பொலிவுப்பெறச்செய்தார்.

தற்போது அப்பஸ்தரிப்புநிலையம் மக்கள் பாவனைக்காக புதுப்பொலிவுடன் காணப்படுவதையிட்டு உறுப்பினர் ச.சசிக்குமார் ,தவிசாளருக்கு நன்றி தெரிவித்தார்.